தமிழ்
இலக்கியக்கோவை

...ட்டுப்பதிப்பகம்
சென்னை.1

தமிழ் இலக்கியக் கோவை

ஐந்தாம் படிவம்—சிறப்புப் பகுதி

தொகுத்தோர் :

புலவர். த. முருகேசன்,

தலைமைத் தமிழாசிரியர்,

இராமசாமிச் செட்டியார் நகர உயர்நிலைப்பள்ளி, சிதம்பரம்.

புலவர். இரா. கணபதி,

தலைமைத் தமிழாசிரியர்,

இராமசாமிச் செட்டியார் நகர உயர்நிலைப்பள்ளி, அண்ணாமலைநகர்.

தென்னாட்டுப் பதிப்பகம்

16, பிராட்வே : : சென்னை-1

1958

[விலை ரூ. 0-12-0

முதற் பதிப்பு—1955
இரண்டாம் பதிப்பு—1956
மூன்றாம் பதிப்பு—1958

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part I-B of the
Fort St. George Gazette No. 14-B dated 4-4-1956, Page 5]

Kabeer Printing Works, Madras (3804)

முகவுரை

'தமிழ் இலக்கியக் கோவை' என்ற பெயருடைய இந்நூல், அண்மையில் அரசியலார் வெளியிட்ட பாட இயலிற்கேற்ப, (ஐந்தாம் படிவம் சிறப்புப் பகுதிக்கேற்ற முறையில்) தொகுக்கப்பெற்று வெளிவருகிறது.

மாணுக்கர்கள் 'தின்றதையே தின்று தெவிட்டுத லில்லாமல் அன்றன்று வாழ்விற் புதுமை காணவேண் டும்' என்ற மொழிக் கேற்ப, செய்யுட் பகுதியிலும் உரைநடைப் பகுதியிலும் தமிழக மாணவர்கட் கேற்ற முறையில், பழமையில் காணும் நல்லனவற்றையும், புதுமையில் காணும் நல்லனவற்றையும் தொகுத்துத் தமிழிலக்கியக் கோவையை வெளியிட்டுள்ளோம்.

ஐந்தாம் உயர்வகுப்பிற் கேற்ற முறையில் சிறந்த பேராசிரியர்களின் எழுத்தோவியங்கட்கும் செய்யுட்பகு திக்கும், உரைநடைப் பகுதிக்கும்,—சொற்பொருள், விளுக்கள், பயிற்சிகள், இலக்கணக் குறிப்புக்கள் ஆகி யவை அமைந்துள்ளமையால் மாணுக்கர் தமிழ் மொழி யைப் பிழையற எழுதவும் பேசவும் ஆற்றல் பெற்றுத் தெள்ளியவராவர் என நம்புகிறோம்.

செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் அளித்து உதவிய பேராசிரியர்கட்கும், தமிழன்பர்கட்கும் எம் உளமார்ந்த நன்றியை அளிக்கின்றேம். இந்நூல் வெளிவரப் பல்லாற்றுனும் துணைபுரிந்த பெருமக்கள் அனைவர்க்கும் உளங்கனிந்த நன்றி உரியதாகுக.

இந்நூல் நன்முறையில் வெளிவரச் செய்த தென் ஞட்டுப் பதிப்பகத்தார்க்கும், கபீர் அச்சகத்தினர்க்கும், மாணவர்கட்குப் பயிற்றுவிக்கும் ஆசிரியப் பெரியோர் கட்கும் எங்கள் அன்பார்ந்த நன்றியை அளிக்கின்றேம்.

த. முருகேசன்,
இரா. கணபதி.

உள்ளுறை

செய்யுட்பகுதி

உரைநடைப் பகுதி

தமிழ் இலக்கியக் கோவை

ஐந்தாம் படிவம்—சிறப்பு

செய்யுட்பகுதி

I. வாழ்த்து

1. கடவுள் வாழ்த்து

[பின்வரும் பாடல் கம்பரால் இயற்றப்பட்ட இராமாயணத்தின்கண் உள்ளது. எங்கும் நிறைந்த இறைவனது இயல்பைப் பொதுவகையில் அழகுற உணர்த்துவது இச்செய்யுள்.]

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே.

சொற்பொருள்

உளவாக்கல் - படைத்தல். நீக்கல் - அழித்தல். நீங்கலா - (இம் முத்தன்மையும்) நீங்காத. அலகு - அளவு. சரண் - அடைக்கலம். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களைச் செய்யும் பரம் பொருளே எமக்குத் தலைவனுவான் என்பது இதன் கருத்து.

வினு

1. இறைவனது அளவற்ற விளையாட்டினை விளக்குக.

பயிற்சி

1. இப்பாடலின் கருத்தைத் துணைகொண்டு கம்பரின் மதக்கொள்கையை ஆராய்க.

2. சேர்த்தெழுதுக: தாம் + உள, அலகு + இலா, உடையார் + அவர், அன்னவர் + கு.

3. இப்பாடலில் கூறப்பட்டுள்ள பரம்பொருளின் தன்மையை விளக்கி எழுதுக.

II. அறவுரை

1. சிறுபஞ்சமூலம்

[சிறுபஞ்சமூலம் : ஐவகை வேர்களாலாய மருந்து. மருத்துவ நூலின்கண் கூறப்படும் கண்டங்கத்திரி வேர், சிறுவழுதுணைவேர், சிறு மல்லி வேர், பெருமல்லி வேர், நெருஞ்சி வேர் என்னும் ஐவகை வேர்க ளாலாய மருந்து ஒருவன் உடற்பிணியை நீக்குமாறு போல இந்நூற் செய்யுட்கள் ஒவ்வொன்றிலும் உள்ள ஐந்து கருத்துக்கள் மக்களின் அறி யாமை நோயைப் போக்குவதால் இப்பெயர் பெற்றது. இது பதினெண் கீழ்க் கணக்கைச் சேர்ந்தது.]

இதனைப் பாடியவர் காரியாசான் என்னும் புலவர். இவர் சமண மதத்தினர். காலம் : கடைச்சங்க காலம் என்பர்.

வனப்பு

கண்வனப்புக் கண்ணோட்டம்; கால்வனப்புச் செல்லாமை;
எண்வனப்பு இத்துணையா மென்றுரைத்தல் ;—பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல்; கிளர்வேந்தன் தன்னாடு
வாட்டானன் றென்றல் வனப்பு. 1

எல்லார்க்கும் ஒவ்வொன்றெளிது

வான்குருவிக் கூடரக்கு வால்உலண்டு கோற்றருதல்
தேன்புரிந்து யார்க்கும் செயலாகா—தாம்புரீஇ
வல்லவர் வாய்ப்பன வென்னார் ; ஒரோவொருவர்க்(கு)
ஒல்காதோ ரொன்று படும். 2

குடிஉயரக் கோன்உயர்வான்

வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலும்
நீர்சான் றுயரவே நெல்லுயருஞ்—சீர்சான்ற
தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயரும்
ஓவா துரைக்கு முலகு. 3

கொலைப்பாவம்

கொன்றான், கொலையை யுடன்பட்டான், கோடாது
கொன்றதனைக் கொண்டான், கொழிக்குங்காற்—கொன்றதனை
அட்டான், இடவுண்டா னைவரினு மாகுமெனக்
கட்டெறிந்த பாவங் கருது. 4

சான்றோர் செய்யாதன

தோற்கன்று காட்டிக் கறவார், கறந்தபால்
பாற்பட்டார் உண்ணர் ; பழிபாவம்—பாற்பட்டார்
ஏற்றவா தின்புற்று வாழ்வன வீடழியக்
கூற்றுவப்பச் செய்யார் கொணர்ந்து. 5

சொற்பொருள்

1. வனப்பு - அழகு. கண்ணோட்டம் - இரக்கவுணர்ச்சியுடன் கூடிய பார்வை. செல்லாமை - பிறர்பால் யாசிக்கச் செல்லாமை. எண் வனப்பு - ஒரு பொருளை ஆய்வதற்கழகு. வாட்டான் - வருத்தான். நன்று என்றல் - (இவனுட்சி) நன்மையுடைய தெனப் பிறர் கூறுதல்.

2. அரக்கு - செம்மெழுக்காலாய குளவிக் கூடு. வால் உலண்டு - நூல் நூற்கும் உலண்டு என்னும் பட்டுப் புழு. கோல் தருதல் - சிலந்தியின் கூடுபோல் பின்னுதல். தேன் - தேனடை. புரிந்து யார்க்கும் செயல் ஆகா - உணர்ந்து எவராலும் செய்ய இயலா. வல்லவர் தாம் புரீஇ வாய்ப்பன என்னர் - எல்லாம் வல்லவரும் இவற்றை விரும்பித் தம்மால் செய்ய இயல்வன என்று கூருர். ஒல்காது ஒரொன்று படும் - குறைவின்றி ஒவ்வொன்று உண்டாகியிருக்கும். புரீஇ - சொல்லிசை யளபெடை.

3. வார் சான்ற - நீட்சிமிகுந்த. தாவா - கெடாத. கோ - அரசன். உலகு - உலக மக்கள் ; இடவாகு பெயர். ஓவாது உரைக்கும் - இடைவிடாது கூறுவர்.

4. கோடாது - நாணுமல், கொண்டான் - விலைக்குக் கொண்டவன். கொழிக்குங்கால் - ஆராயுமிடத்து. அட்டான் - சமைத்தான். கட்டெறிந்த பாவம் - அறத்தின் வரம்பைச் சிதைத்த பாவம் ; 'பாவம் ஆகும் எனக் கருது' எனக் கூட்டுக.

5. பாற்பட்டார் - நன்னெறியுடையார். பழிபாவம் ஏற்று - பழியையும் பாவத்தையும் தம்மீதேற்று. அவாவாது - விரும்பாது. ஈடழிய- பெருமை குன்ற. வாழ்வனவற்றைக் கொணர்ந்து கூற்றுவப்ப அவற்றைக் கொல்லார் என்க.

வினுக்கள்

1. எவ்வெவற்றிற்கு எவ்வெவை அழகாகும் ?
2. வல்லவர் எவற்றைச் செய்ய இயலும் எனக் கூருர் ?
3. வரப்பு உயர்வதால் உயர்வன எவை ?
4. வரம்பழித்த பாவமுடையார் ஐவர் யாவர் ?
5. நன்னெறிப் பட்டோர் எவற்றைச் செய்யார் ?

பயிற்சி

1. ஐந்து பாடல்களிலும் அமைந்த கருத்துக்களை வைத்து ஒரு கட்டுரை எழுது.

2. சேர்த்தெழுதுக: கண் + ஓட்டம், தன் + நாடு, நன்று + என்றல், நெல் + உயரும், செயல் + ஆகா, குடி + உயர, புரிந்து + யார்க்கும்.

3. பின்வருவனவற்றிற்குப் பகுபத உறுப்புத்தருக:—செல்லாமை, உயரும், கொண்டான், அட்டான், செய்யார்.

2. திருமந்திரம்

[திருமந்திரம் - திரு + மந்திரம். மந்திரம் - மறைவான பொருளை உடையது. இந்நூல் சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாவதாகும். வேதநூல் கருத்துக்களையும், சிவாகம நூற்பொருள்களையும் வடித்தெடுத்துக் கூறுவது. மூவாயிரம் பாடல்களையுடையது.]

இதன் ஆசிரியர் திருமூலர். இவர் ஓர் புலமை நலம் சான்ற துறவி. இவரது காலம் 4000 ஆண்டுகட்கு முன் என்பர். இவர் இந்நூலுக்கு இட்ட பெயர் 'தமிழ் மூவாயிரம்' என்பது.

நிலையாமை

கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டும் தேறார் விழியிலா மாந்தர்!
குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே. 1

நல்குரவு

புடவை கிழிந்தது, போயிற்று வாழ்க்கை
அடையப் பட்டார்களும் அன்பிலர் ஆனார்;
கொடையில்லை, கோளில்லை, கொண்டாட்டம் இல்லை,
நடையில்லை, நாட்டில் இயங்குகின் றார்கட்கே. 2

ஈகை

கோல வறட்டைக் குனிந்து குளகிட்டு
பாலைக் கறந்து பருகுவ தேயொக்குஞ்;
சீலமும் நோன்பும் இலாதவர்க் கீந்தது
காலங் கழிந்த பயிரது ஆகுமே. 3

உடலோம்பல்

உடம்பார் அழியில் உயிரார் அழிவர் ;
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார் ;
உடம்பை வளர்க்கு முபாயம் அறிந்தே,
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே ! 4

நெறிவழுவாமை

நெறியைப் படைத்தான், நெருஞ்சில் படைத்தான் ;
நெறியில் வழுவில் நெருஞ்சில்முள் பாயும் !
நெறியில் வழுவா தியங்கவல் லார்க்கு
நெறியின் நெருஞ்சில்முள் பாயகி லாவே. 5

சொற்பொருள்

1. தேருர் - உலக நிலையாமையைத் தெளிவாக அறியார். விழி - அறிவுக் கண். வியன் - அகன்ற.

2. புடவை - ஆடை. அடையப்பட்டார் - நண்பர் உறவினர் முதலானேர். வறுமை வந்தால் உறவினரும் அகன்று செல்வர் என்பது' கோள் - கொள்ளுதல். நடை - ஏறுபோற் பீடு நடை. நாட்டில் இயங்கு கின்ருர்க்கு - பொருளின்றி நடைப்பிணம் போல் உலாவும் வறியவர் களுக்கு.

3. கோலவறட்டை - அழகிய மலட்டுப் பசு. குளகு - தழை உணவு. சீலம் - ஒழுக்கம். காலங்கழிந்த பயிர் - காலங்கடந்து விளை வித்த பயிர்.

4. உடம்பார் - உடல். உடலை உரிய முறையில் வளர்ப்பது உயிர் வளர்ச்சிக்கு ஏதுவாகும் என்பது கருத்து.

5. பாயகிலா - தைக்கமாட்டா.

விளுக்கள்

1. உலக நிலையாமையை எவற்ருல் உணரலாம் ?
2. நல்குரவு உற்ருர்க்கு எவை இல்லையாகும் ?
3. தகுதியற்ருேர்க்கு ஈதல் எவற்றைப் போன்றது ?
4. உடலை வளர்த்தல் இன்றியமையாதது—ஏன் ?
5. நெறியில் வழுவார் அடையும் நிலை யாது ?

பயிற்சி

1. 'ஞாயிறு, குழக்கன்று, நெருஞ்சில்முள்'—இவற்றை வைத்துக் கூறப்பட்டுள்ள கருத்துக்களை விளக்குக.

2. பிரித்தெழுதுக:—குழக்கன்று, வியனுலகு, அன்பிலர், பயிரது, மெய்ஞ்ஞானம்.

III. காதை

1. கம்பராமாயணம்

கும்பகருணன் வதைப் படலம்

கம்பர் + ராமாயணம் = கம்பராமாயணம். இந்நூல் வடமொழி வால்மீகி இராமாயணத்தைத் தழுவித் தமிழில் கம்பரால் இயற்றப் பட்டது. இந்நூல் (1) பாலகாண்டம், (2) அயோத்தியா காண்டம், (3) ஆரண்ய காண்டம், (4) கிஷ்கிந்தா காண்டம், (5) சுந்தர காண்டம், (6) யுத்த காண்டம், (7) உத்தரகாண்டம் என்ற ஏழு காண்டங்களை யுடையது.

கம்பர் இந்நூலுக்கு இட்ட பெயர் 'இராமாவதாரம்' என்பது. இவர் சோழ நாட்டுத் தேரழுந்தூரில் கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் பிறந் தவர். இவர் ஏரெழுபது, திருக்கை வழக்கம், சரசுவதி யந்தாதி முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

இராமனுக்கும் இராவணனுக்கும் நடைபெற்ற முதல் நாட்போரில் இராவணன் தோல்வியுற்று மீள்கின்றான். மறுநாள் இராவணன் தம்பியாகிய கும்பகருணன் போருக்கு வருகின்றான். அவனது பேருருவத்தைக் கண்ட இராமன் அவன் யார் என விபீடணனை வினவுகின்றான். மேலுள்ள கதைப் பகுதியைப் பின்வரும் பாடல்கள் கூறுகின்றன.

இராமன் கும்பகர்ணனைக் காணுதல்

பாந்தளி னெடுந்தலை வழுவிப் பாரொடும்
வேந்தென விளங்கிய மேரு மால்வரை
போந்தது போற்பொலந் தேரிற் பொங்கிய
ஏந்தலை ஏந்தெழில் இராம னோக்கினான். 1

இராமன் விபீடணனை வினவுதல்

அரக்கனவ் வுருவொழித் தரியின் சேனையை
வெருக்கொளத் தோன்றுவான் கொண்ட வேடமோ?
தெரிக்கிலே னிவ்வுருத் தெரியும் வண்ண நீ
பொருக்கென வீடணா! புகறியா லென்றான். 2

விபீடணன் இராமனுக்குக் கும்பகருணன் திறம் உரைத்தல்

வேறு

ஆழி யாயிவ னாகுவான்
ஏழை வாழ்வுடை யெம்முனோன்
தாழ்வி லாவொரு தம்பி ; ஓர்
ஊழி நாளு முறங்குவான். 3

கால னாருயிர் காலனால்
காலின் மேனிமிர் காலினான் ;
மாலி னார்கெட வாகையே
சூல மேகொடு சூடினான் ! 4

தாங்கு கொம்பொரு நான்குகால்
ஓங்க லொன்றினை யும்பர்கோன்
வீங்கு நெஞ்சன் விழுந்திலான்
தூங்க நின்று சுழற்றினான். 5

ஒழிந்த தீயொடு காலையும்
பிழிந்து சாறுகொள் பெற்றியான் ;
அழிந்து மீதுக வாழி நீர்
இழிந்து காலினி னெற்றுவான். 6

ஊனு யர்ந்த வுரத்தினான் ;
மேனி மிர்ந்த மிடுக்கினான் ;
தானு யர்ந்த தவத்தினான் ;
வானு யர்ந்த வரத்தினான். 7

கும்பகருணனை நம்பால் சேர்த்தல் நலமெனச் சுக்கிரீவன் கூறல்

வேறு

என்றவ னுரைத்த லோடு
மிரவிசேயிவனை யின்று
கொன்றொரு பயனு மில்லைக்
கூடுமேற் கூட்டிக் கொண்டு
நின்றது புரிது மற்றிந்
நிருதர்கோ னிடரு நீங்கும் ;
நன்றென நினைத்தே னென்றான்
நாதனு நலனீ தென்றான். 8

கும்பகருணன் பால் தான் செல்வதாக விபீடணன் கூறுதல்

" ஏகுதற் குரியார் யாரே "
என்னலு மிலங்கை வேந்தன்
ஆகின்மற் றடிய னேசென்
றறிவினால் அவனை யுள்ளம்
சேகறத் தெருட்டி மீண்டுச்
சேருமேற் சேர்ப்ப லென்றான்,
மேகமொப் பானு " நன்று !
போ "கென்று விடையு மீந்தான். 9

விபீடணன் கும்பகருணனைக் கண்டு வணங்குதல்

தந்திரக் கடலை நீந்தித்
தன்பெரும் பலத்தைச் சார்ந்தான்
வெந்திற லவனுக் கைய !
வீடணன் விரைவி லுன்பால்
வந்தன னென்னச் சொன்னார் ;
வரம்பிலா வுவகை கூரச்
சிந்தையாற் களிக்கின் றான்றன்
செறிகழற் சென்னி சேர்த்தான். 10

கும்பகருணன் விபீடணனை வினவுதல்

முந்திவந் திறைஞ்சி னானை
முகந்துயிர் மூழ்கப் புல்லி,
உந்தனை யொருவை போனா
யெனமன முவக்கின் றேனென்
சிந்தனை முழுதுஞ் சிந்தத்
தெளிவிலார் போல மீள
வந்ததென் தனியே யென்றான்
மழையினீர் வழங்கு கண்ணான். 11

விபீடணன் கூறுதல்

இருளுறு சிந்தை யேற்கும்
இன்னருள் சுரந்த வீரன்
அருளுநீ சேரி னென்றோ ?
அபயமு மளிக்கு மன்றி

மருளுறு பிறவி நோய்க்கு
மருந்துமாம் ; மாறிச் செல்லும்
உருளுறு சகட வாழ்க்கை
ஒழித்துவீ டளிக்கு மன்றே ! 12

எனக்கவன் தந்த செல்வத்
திலங்கையு மரசு மெல்லாம்
நினக்குநான் தருவென் தந்துன்
ஏவலி னெளிதி னிற்பேன் ;
உனக்கிதி னுறுதி யில்லை
யுத்தம ! உன்பின் வந்தேன்
மனக்குநோய் துடைத்து வந்த
மாயையும் விளக்கும் ; வாழி ! 13

தீயவை செய்வ ராகிற்
சிறந்தவர், பிறந்த வுற்றார்
தாயவை தந்தை மாரென்
றுணர்வரோ தருமம் பார்ப்பார் ?
நீயவை யறிதி யன்றே,
நினக்கியா னுரைப்ப தென்னே ?
தூயவை துணிந்த போது
பழிவந்து தொடர்வ துண்டோ ? 14

கும்பகருணன் வீபீடணனை மறுத்துரைத்தல்

நீர்க்கோல வாழ்வை நச்சி,
நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க் கோலஞ் செய்து விட்டாற்
குயிர் கொடா தங்குப் போகேன்
தார்க்கோல மேனி மைந்த !
என்றுயர் தவிர்த்தி யாயின்
கார்க் கோல மேனி யானைக்
கூடுதி கடிதி னென்றான். 15

கருத்திலா இறைவன் தீமை
கருதினா லதனைக் காத்துத்
திருத்தலா மாகி னன்றே
திருத்துதல் தீரா தாயின்

பொருத்துறு பொருளுண் டாமோ ?
பொருதொழிற் குரிய ராகி
ஒருத்தரின் முன்னஞ் சாதல்
உண்டவர்க் குரிய தம்மா ! 16

தும்பியந் தொடையல் வீரன்
சுடுகணை தூாப்பச் சுற்றும்
வெம்புவெஞ் சேனை யோடும்,
வேறுள கிளைஞ ரோடும்,
உம்பரும் பிறரும் போற்ற
ஒருவன்மூ வுலகை யாண்டு
தம்பிய ரின்றி மாண்டு
கிடப்பனோ தமையன் மண்மேல் ? 17

செம்பிட்டுச் செய்த இஞ்சித்
திருநகர்ச் செல்வந் தேறி
வம்பிட்ட தெரிய லும்முன்
உயிர்கொண்ட பகையை வாழ்த்தி
அம்பிட்டுத் துன்னங் கொண்ட
புண்ணுடை நெஞ்சோ டைய !
கும்பிட்டு வாழ்கி லேன்யான் ;
கூற்றையு மாடல் கொண்டேன் ! 18

ஆலங்கண் டஞ்சி யோடும்
அமரர்போ லரிக ளோடச்
சூலங்கொண் டோடி வேலை
தொடர்வதோர் தோற்றந் தோன்ற
நீலங்கொள் கடலு மோடக்
காலொடு நெருப்பு மோடக்
காலங்கொள் உலகு மோடக்
கறங்கெனத் திரிவன் காண்டி ! 19

என்றவன் றன்னை மீட்டும்
எடுத்துமார் பிறுகப் புல்லி
நின்றுநின் றிரங்கி யேங்கி
நிறைகணு னெடிது நோக்கி

இன்றெடுந் தவிர்ந்த தன்றே
　　யுடன்பிறப் பென்ப தென்றான் ;
வென்றிவெந் திறலி னானும்
　　அவனடித் தலத்து வீழ்ந்தான்.

சொற்பொருள்

1. பாந்தள் - ஆதிசேடனாகிய பாம்பு. வழுவி - நழுவி. வழுவி மேரு மால்வரைப் போந்ததுபோல் எனக் கூட்டுக. பொலந்தேர் - பொன்னாலாகிய தேர். ஏந்தல் - கும்பகருணன். ஆதிசேடனது தலை நழுவி வீழ்ந்து உலகத்துடன் மேருமலையின் உச்சியில் நின்று விளங்கு வது போல மிகப் பெரிய தேரின்மேல் கும்பகருணன் விளங்கி நின்ற னன் என்பது.

2. அரக்கன் - இராவணன். அரியின் சேனை - குரங்குச் சேனை. வெருக்கொள - அச்சம் அடைய. தெரிக்கிலேன் - அறியேன். பொருக் கென - விரைவாக. புகறி - புகல் + தி ; கூறுவாயாக.

3. ஆழியாய் - சக்கரப் படையினை உடையாய் ! ஏழை வாழ்வு - அறிவற்ற வாழ்வு. எம்முனோன் - எம் அண்ணனாகிய இராவணன்.

4. காலன் ஆருயிர் காலன் - எமனது அரிய உயிருக்குக் காலன் போன்றவன். ஆல் - அசை. காலின்மேல் நிமிர் - காற்றினும் விரை வாகச் செல்லுகின்ற. சூலமே கொண்டு வாகை சூடினன் என இயைக்க.

5. ஒரு கொம்பு நான்கு கால் ஓங்கல் - ஒற்றைக் கொம்பையும் நான்கு கால்களையுமுடைய அயிராவதம் என்னும் வெள்ளை யானை. தூங்க - தொங்க. உம்பர்கோன் - தேவேந்திரன்.

6. கால் - காற்று. பெற்றியோன் - தன்மையான். இழிந்து - இறங்கி. கடல்நீரைக் கீழே இறங்கிக் காலால் எற்றி வற்றச் செய்து விடும் ஆற்றலுடையவன்.

7. உரம் - மார்பு. மிடுக்கு - பீடு நடையுடன் கூடிய தோற்றம். வான் உயர்ந்த - வானளவு ஓங்கிய.

8. இரவிசேய் - சுக்கிரீவன். புரிதும் - செய்வோம். இந்திருதர் கோன் - இக்கும்பகருணன். நாதன் - இராமன்.

9. இலங்கைவேந்தன் - விபீடணன். இராமனால் எதிர்கால இலங்கை வேந்தனாகப் பட்டம் சூட்டப்பட்டுள்ளானாதலின் இங்ஙனம் கூறப்பட்டான். சேகு + அற - சேகற ; குற்றம் நீங்க. தெருட்டி - தெளி வித்து. சேருமேல் சேர்ப்பல் - சேருவானாயின் உன்பால் சேர்விப்பேன்.

10. தந்திரக் கடல் - சேனையாகிய கடல். பலம் - சேனை. தன்பெரும் பலம் என்றது தானும் அரக்கனாதலின். உவகை கூர - மகிழ்ச்சி மிக. செறிகழல் - நெருங்கிய வீரக் கழலை யணிந்த திருவடி ; வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

11. இறைஞ்சினானை - வணங்கிய விபீடணனை. முகந்து - வாரி

எடுத்து. உயிர் மூழ்க - உயிருடன் உயிர் கலக்க. புல்லி - தழுவி. ஒருவை போனாய் - நீ மட்டுமே நீங்கிச் சென்றாய். சிந்த - குலைய. வந்தது + என் - வந்ததென்.

12. சிந்தையேன் + கு - சிந்தையேற்கு; மனத்தை உடைய எனக்கு. நீ சேரின் அருளும் - நீ வந்து அவனுடன் சேர்ந்தால் அருள் செய்வான். ஒன்றோ - அதுமட்டுமோ ? வழியினின்றும் தவறிச் செல்லுகின்ற வண்டி உருளைபோன்று செல்லுகின்ற உன் வாழ்வினை.

13. மனக்குநோய் துடைத்து - மனத்துயரையும் போக்கி.

14. தருமம் பார்ப்பார் - மநு நூல் விதியை நோக்கும் அறிஞர்கள். அறிதி - அறிவாய். தூயவை துணிந்தபோது - தூய செயல்களைச் செய்ய முனைந்தபோது.

15. நீர்க்கோல வாழ்வை - நீரிற் குமிழிபோல் தோன்றி மறையும் வாழ்வினை. நச்சி - விரும்பி. விட்டாற்கு - விடுத்த இராவணனுக்கு. தார் - மாலை. தவிர்த்தியாயின் - நீக்க எண்ணுவாயாயின். கூடுதி - சேர்வாய்.

16. திருத்தல் ஆகின் அன்றோ ஆம் ? - திருத்தினாலன்றோ அது கடமையைச் செய்வதாகும். தீராதாயின் - இயலாதெனின்.

ஒருத்தரின் முன்னம் - பாதுகாத்து வளர்த்தவர் முன்பு. உண்டவர்க்கு - அவர் தந்த உணவை உண்டு வாழ்ந்தவர்க்கு. "புரந்தார் கண் நீர் மல்கச் சாகிற்பின் சாக்காடு இரந்து கோட்டக்க துடைத்து" என்ற குறட்கருத்தை ஒப்பு நோக்குக.

17. தும்பியந் தொடையல் - வண்டுகள் மொய்க்கும் மலர்மாலை. சுடுகணை - வருத்தும் அம்பு; வினைத்தொகை. துரப்ப - விடுக்க. கிளைஞர் - சுற்றத்தார். உம்பர் - தேவர்.

18. செம்பிட்டுச் செய்த இஞ்சி - செம்பினால் உருக்கி வார்க்கப்பட்ட மதில். தேறி - விரும்பி. வம்பு இட்ட தெரியல் - மணம் வீசும் மாலை. உம்முன் - இராவணன். பகை - பகைவனாகிய இராமன். துன்னங் கொண்ட - தைக்கப் பெற்ற. வாழ்கிலேன் - வாழேன். ஆடல் - வெற்றி.

19. ஆலம் - பாற்கடலில் தோன்றிய நஞ்சு. அமரர் - தேவர். அரி - குரங்கு. கறங்கு என - காற்றாடியை போல. காண்டி - காண்பாயாக.

20. என்று - என்று கூறி. அவன் - விபீடணன். நிறைகணால் - நீர் நிறைந்த கண்களால். தவிர்ந்தது - நீங்கியது. வென்றி - வெற்றி.

வினாக்கள்

1. கும்பகர்ணன் வந்த தோற்றம் எவ்வாறு கூறப்பட்டுளது ?
2. இராமன் விபீடணன்பால் வினவியது யாது ?
3. விபீடணன் கூறிய கும்பகருணனின் திறங்களை வரைக.
4. சுக்கிரீவன் உரைத்த உபாயம் யாது ?
5. விபீடணன் கும்பகர்ணன்பால் உரைத்த நன்மொழிகள்யாவை?

6. தரும நூல் விதியை நோக்குவார் எவற்றைக் கருதார் ?

7. இராவணனைப் பிரிதல் தக்கதன்றென்பதற்குக் கும்பகருணன் காட்டிய காரணங்கள் யாவை ?

பயிற்சி

1. இப்பாடல்களில் வந்துள்ள படர்க்கை வினைமுற்றுக்களை எடுத்தெழுதுக.

2. கும்பகருணன் கூற்றாகவுள்ள பாடற்பகுதியினாற் பெறப்படும் உயர்ந்த பண்பாட்டினை விளக்கி எழுதுக.

3. சேர்த்தெழுதுக :—வேந்து + என, பொலம் + தேர், இராமன் + நோக்கினான், வெரு + கொள, புகல் + தி, அருமை + உயிர், ஊன் + உயர்ந்த, சேகு + அற.

4. விளக்குக :—“ஏழை வாழ்வுடை எம்முனோன்”, “இரவி சேய்”, “நீர்க்கோல வாழ்வு”, “செம்பிட்டுச் செய்த இஞ்சி”, “ஒருத்தரின் முன்னஞ்சாதல் உண்டவர்க்குரியது”.

2. கலிங்கத்துப் பரணி

படை எழுச்சி

[கலிங்க நாட்டின்மீது முதற் குலோத்துங்கனின் சேனைத் தலைவன் கருணாகரத் தொண்டைமான் படை எடுத்துச் சென்று வெற்றி பெற்று மீண்ட வரலாற்றைக் கூறும் நூல் கலிங்கத்துப் பரணி.

பரணி என்பது தமிழின் கண் உள்ள 96 வகைப் பிரபந்த வகைகளுள் ஒன்று. யானைப் படைகளைப் போர்க்களத்தில் அழித்து வெற்றி பெற்ற மாவீரன்மீது இயற்றப்படுவது.

இந்நூல் குலோத்துங்க சோழனைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது; ‘செயங்கொண்டார்’ என்னும் புலவர் பெருமானால் இயற்றப்பட்டது. இவர் “பரணிக்கோர் செயங்கொண்டான்” என்று புகழப்பெற்றவர். காலம் கி. பி. 11-ஆம் நூற்றாண்டின் இறுதி. இப்பகுதி கலிங்க நாட்டின்மீது போருக்கெழுந்த கருணாகரத் தொண்டைமானது படைச்சிறப்பைப் பற்றிக் கூறுவது.]

கருணாகரனின் படைவன்மை

கடல்க லக்கல்கொல்? மலையி டித்தல்கொல்?
கடுவி டப்பொ றிப் பணபணிப்
பிடரொ டித்தல்கொல்? படைநி னைப்பெனப்
பிரள யத்தினில் திரளவே. 1

பல்வகை இசைக் கருவிகளின் ஒலிகள்

வளைக லிப்பவும், முரசொ லிப்பவும்
மரமி ரட்டவும் வயிரமாத்
தொளையி சைப்பவும் திசையி பச்செவித்
தொளைய டைத்தலைத் தொடரவே. 2

குடைகள் முதலியவற்றால் இருள் மூடுதல்

குடைநி ரைத்தலின், தழைநெ ருக்கலின்
கொடிவி ரித்தலின் குளிர்ச துக்கமொத்(து)
இடைநி ரைத்தலின் பகல்க ரப்பவுய்த்(து)
இருநி லப்பரப் பிருள்ப ரக்கவே. 3

பற்பல ஒளிகள் இருளை அகற்றல்

அலகில் வட்டிகை தழல்வி ழித்தலால்,
அரிய பொற்பணிக் கலனெ ரித்தலால்,
இலகு கைப்படைக் கனல்வி ரித்தலால்
இருள்க ரக்கவே ஒளிப ரக்கவே. 4

மக்கள் வியத்தல்

அகில வெற்புமின் றியானை யானவோ !
அடைய மாருதம் புரவி யானவோ !
முகில னைத்துமத் தேர்க ளானவோ !
மூரி வேலைபோர் வீர ரானவோ ! 5
பார்சி றுத்தலின் படைபெ ருத்ததோ !
படைபெ ருத்தலின் பார்சி றுத்ததோ !
நேர்செ றுத்தவர்க்(கு) அரிது நிற்பிடம்
நெடுவி சும்பலால் இடமு மில்லையே. 6

நால்வகைப் படைகள்

எனவெ டுத்துரைத் ததிச யித்துநின்(று)
இனைய மண்ணுளோர் அனைய விண்ணுளோர்
மனந டுக்குறப் புறம றைத்த ;வான்
மாதி ரங்களைச் சாது ரங்கமே. 7

களிற்றுப் படை

கடல்க ளைச்சொரி மலையுள வெனவிரு
கடத டத்திடை பொழிமத முடையன
கனல்வி ளைப்பன முகிலுள வெனவிழி
கனல்சி னத்தன கரியொடு பரிகளின்
உடல்பி ளப்பன பிறைசில உளஎன
உயர்ம ருப்பின உலகுகள் குலைதர
உருமி டிப்பன வடஅனல் உளவென
ஒலிமு கிற்கட கரிகளு மிடையவே. 8

குதிரைப் படை

முனைக ளொட்டினர் முடிகளை இடறுவ;
முடியின் முத்தினை விளைபுகழ் எனநில
முதுகில் வித்துவ; நிலமுறு துகளற
முகில்மி திப்பன; முகில்விடு துளியொடு
கனைக டல்திரை நிரையென விரைவொடு
கடலி டத்தினை வலமிடம் வருவன;
கடலி டத்(து)இறும் இடியென அடியிடு
கவன மிக்கன கதழ்பரி கடுகவே. 9

தேர்ப் படை

இருநி லத்திடர் உடைபடும் உருளன
இருபு டைச்சிறகு உடையன முனைபெறின்
எதிர்ப றப்பன விடுநுக மொடுகடி(து)
இவுளி முற்படின் இதுபரிபவமெனும்
ஒருநி னைப்பினை யுடையன வினையன
உயிர்செய் மொட்டொடு நறுமலர் எனஅவிழ்(வு)
ஒழித ரச்செரு உறுபுனல் உமிழ்வன
உலக ளப்பன இரதமும் விரவவே. 10

காலாட் படை

அலகில் வெற்றியும் உரிமையும் இவைஎன
அவய வத்தினில் எழுதிய அறிகுறி
அவைஎ னப்பல வடுநிரை உடையவர்
அடிபு றக்கிடில் அமரர்தம் உலகொடிவ்

உலகு கைப்படும் எனினும(து) ஒழிபவர்
உடலெ மக்கொரு சுமையென முனிபவர்
உயிரை விற்(று)உறு புகழ்கொள உழல்பவர்
ஒருவர் ஒப்பவர் படைஞர்கள் மிடையவே. 11

மறவரின் ஆற்றல்

விழித்த விழிகனல் விழித்த விருதர்கள்
விடைத்து வெடுவெடு சிரித்தவாய்
தெழித்த பொழுதுடல் திமிர்க்க இமையவர்
திசைக்கண் மதகிரி திகைக்கவே. 12

படைச் செலவு

எழுதூளி யடங்க நடந் துதயத்(து)
ஏகுந் திசைகண்(டு) அதுமீ ளவிழும்
பொழு(து)ஏ கல்ஒழிந் துகடற் படைஎப்
பொழுதுந் தவிரா துவழிக் கொளவே. 13

கருணாகரத் தொண்டைமான் களிற்றின்மீது ஏறல்

தண்ணார்மலர் சேர்திரள் தோள் அபயன்
தானேவிய சேனை தனக்கடையக்
கண்ணாகிய சோழன் சக்கரமாங்
கருணாகரன் வாரண மேல்கொளவே. 14

சொற்பொருள்

1. கலக்கல் கொல் - கலக்குவதோ? பொறி - புள்ளி. பணம் பணிப் பிடர் - பணமகுடத்தையுடைய ஆதிசேடனின் கழுத்து. பிரளயத்தினில்- ஊழிக்கால வெள்ளம் போன்று.

2. வளை கலிப்ப - சங்குகள் ஒலிக்க. மரம் இரட்ட - ஊதுகொம்பு ஒலிக்க. தொளை - ஊது கருவி. திசை இபம் - எண்டிசை யானைகள்.

3. தழை - பீலிக்குடை. பகல்கரப்ப உய்த்து - ஞாயிற்றை மறையச்செய்து.

4. அலகுஇல் வட்டிகை - அளவற்ற கேடயங்கள். எரித்தல் - ஒளி வீசல், கைப்படை - வாள் வேல் முதலியன.

5. அகில வெற்பும் - உலகின் கண் உள்ள மலையாவும். மாருதம் - ஊழிக்காற்று. மூரிவேலை - வலிய கடல்.

6. நேர் செறுத்தவர் - நேர்நின்று போரிடுவோர். விசும்பு-வானம்.

7. மாதிரம் - திசைகள். சதுரங்கம் - நால்வகைப் படைகள்.

8. சொரி - பொழிகின்ற. கடதடம் - கன்னம். வடஅனல் - வடவை முகத்தீ. உரு - இடி. கடகரி - மதயானை.

9. முனைகள் ஒட்டினர் - போர்க்களம் அடைந்த பகைவர். நில முதுகில் வித்துவ - புகழிற்கு அடையாளமாக நிலமகளின் மேற்பரப்பில் விதைப்பன. முகில் மிதிப்பன - மேகங்களில் தாவித் துவைப்பன. இறும் - அழிக்கின்ற. அடியிடு கவனம் - அடியிட்டுச் செல்லுகின்ற, சாரிகை. கதழ்பரி - மிகுந்த விரைவையுடைய குதிரை.

10. நிலத்திடர் - நிலமாகிய திட்டு. உருளன - உருளைகளையுடையவை. இவுளி - குதிரை. பரிபவம் - அவமானம். மொட்டு - தேர்மொட்டு. விரவ - கலக்க.

11. வடு - போரில் பெற்ற வாளேறு முதலிய தழும்புகள். புறக்கிடல் - புறங்காட்டி ஓடல். மிடைய - நெருங்க.

12. விருதர் - போர் வீரர். வெடுவெடு சிரித்த - வெடிபடச் சிரித்த. தெழித்த - ஆரவாரித்த.

13. ஏகுந்திசை கண்டு - செல்ல வேண்டிய திசை நோக்கி நடந்து. அது மீள விழும்பொழுது - கதிரவன் மறையும் போதில்.

14. அபயன் - முதல் குலோத்துங்க சோழன். சோழனது ஆணைச் சக்கரம் போன்றவன் கருணாகரன் என்பது அவனது சிறப்பைஉணர்த்தி நின்றது. வாரணம் - பட்டத்து யானை.

வினாக்கள்

1. படைகள் நின்றநிலை எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?
2. மக்கள் படைத் திரள்களைக் கண்டு கூறியன யாவை?
3. நால்வகைப் படைகளும் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டன ?

பயிற்சி

1. கடல்களைச் சொரிமலை, கனல்விளைப்பன முகில், உரும் இடிப்பன அனல், உயிரை விற்று உறுபுகழ் கொள உழல்பவர்—இவற்றை விளக்குக.

2. படையின் ஆற்றலைப்பற்றி 15 வரிகள் எழுதுக.

3. வாக்கியங்களில் அமைக்க :–முரசு, இருநிலம், வட்டிகை, மாருதம், வட அனல், இவுளி, அமரர், கடகரி, உறுபுகழ்.

4. பிரித்தெழுதுக :—இருநிலம், அலகில், நெடுவிசும்பு, முகிலுள, நறுமலர், ஏகுந்திசை, கடற்படை.

3. மனோன்மணீயம்

இரண்டாம் அங்கம்—3-ஆம் களம்

[மனோன்மணீயம் என்னும் நூல் தமிழ் நாட்டு நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட ஒரு நாடக நூல். இதன் ஆசிரியர்: திருவனந்தபுரம் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை எம். ஏ. அவர்கள். இவர் சிறந்த தமிழாராய்ச்சி யறிஞர். சென்ற நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்து மறைந்தவர்.

சீவகன் என்ற பாண்டியன் குடிலன் என்னும் அமைச்சனை முற்றிலும் நம்பி தனக்கே கேடு சூழ்ந்துகொள்ளுகிறான். குடிலன் தன் மகன் பலதேவனுக்குப் பாண்டியன் மகள் மனோன்மணியை மணம்புரிவித்து ஆட்சியைக் கைப்பற்றத் திட்டம் தீட்டுகிறான். இதனை உணராத மன்னன் சேரவேந்தன் புருடோத்தமன்பால் மணம் பேசிவரக் குடிலன் மகன் பலதேவனை அனுப்புகின்றான். பலதேவன் சேரனின் கோபத்தைத் தூண்டி அவனைப் பாண்டிய நாட்டின்மேல் படை எடுத்துவரச் செய்துவிடுகின்றான்.]

இடம்: சேரன் அரண்மனை. காலம்: காலை.

புருடோத்தமனும் பலதேவனும்

பலதேவன்:

மங்கலம் மங்கலம்! மலைய மன்னவ!
பொங்கலைப் புணரிசூழ் புவிபுகழ் சுமக்கத்
தன்தோள் தாரணி தாங்க வெங்கும்
ஒன்னார் தலையொடு திகிரி யுருட்டிக்,
குடங்கை யணையிற் குறும்பர் தூங்க,
இடம்பார்த் தொதுங்குந் தடமுற் றத்து
மேம்படு திருநெல் வேலிவீற் றிருக்கும்
வேம்பார் சீவக வேந்தன் விடுத்த
தூதியான்; என்போ ரோதிலவ் வழுதியின்
மந்திரச் சிகாமணி, தந்திரத் தலைவன்,
பொருந்தலர் துணுக்குறு மருந்திறற் சூழ்ச்சியன்
குடிலேந் திரன்மகன்—

புரு: (தனதுள்) மடையன்!
(வெளிப்படையாக)—வந்த அலுவலென்?

பலதே :

மன்னவா ! நீயாள்
வஞ்சிநா டதற்குத் தென்கீழ் வாய்ந்த
'நன்செய் நாடெ'ன்றொரு நாடுள தன்றே ?
எங்கட் கந்நா டுரித்தாம். அங்கு
பரவு பாடையும் விரவுமா சாரமும்
நோக்கில் வேறொரு சாக்கியம் வேண்டா.

புரு : நல்லது ! சொல்லாய்.

பலதே :

தொல்லையாங் கிழமைபா
ராட்டித் தங்கோல் நாட்டி நடத்த
வல்ல மன்னவ ரின்மையால் வழுதிநாட்(டு)
எல்லையுட் புகுந்தங் கிறுத்துச் சின்னாள்
சதியாய் நீயர சாண்டாய்...............

புரு : அதனால் ?

பலதே :

அன்னதன் னுரிமை மீட்க உன்னியே
முதுநக ராமெழின் மதுரை துறந்து
நெல்லையைத் தலைநகர் வல்லையி லாக்கி
ஈட்டின னுங்கே.

புரு : வேண்டிய தென்னை ?
உரையாய் விரைவில்.

பலதே :

உதியனும் செழியனும்
போர்தனி புரியில் யார்கொல் பிழைப்பர் !
பங்கமி லிரவியுந் திங்களுந் துருவி
எதிர்ப்படுங் காலை ; கதிர்க்கடுங் கடவுள்
மறையஇவ் வுலகில் வயங்கிருள் நிறையும்.
அவரந் நிலையி லமர்ந்திடில் அவ்விருள்
தவறாத் தன்மைபோல் நீவி ரிருவரும்
சமர்செயி னுலகந் தாங்காதென்றே
எமையிங் கேவி யிவ்வவைக் கேற்றவை

நீதியா யெடுத்தெலா மோதிநன் செய்நாடு
உடையார்க் குரிமை யோதி யளிப்பதே
கடனெனக் கழறிப் பின்னிகழ் உன்கருத்(து)
அறிந்து மீளவே விடுத்தான்.

புரு : ஆ! ஆ!

முடிந்ததோ? இலேயெனின் முற்றும் செப்புவாய்.

பலதே :

மேலு மொருமொழி விளம்புதும் வேந்தே!
சாலவும் நீவிர் பகைக்கிற் சகமெலாம்
ஆழ்துயர் மூழ்கலு மன்றி உங்கட்(கு)
ஏது விளையுமோ அறியேம் ஆதலின்
அஞ்சா அரியே றன்னசீ வகனுடன்
வெஞ்சமர் விளைத்தல் நன்றல.

புரு : (பயந்தாற்போல்) ஆ! ஆ!

பலதே :

நன்செய்நா டினிமேல் மீட்டு நல்கலும்
எஞ்சலில் பெரும்புகழ்க் கேற்ற தன்றெனில்
உரைக்குது முபாயமொன்(று) உசிதன் மனையில்
திரைக்கட லமுதே யுருக்கொண் டதுபோல்
ஒருமலர் மலர்ந்தங் குறைந்தது. தேனுண
விரைமலர் தேடளி வீற்றிங் கிருந்தது.
அன்னவள் மன்ன! நின் அரியணை யமரில்
தென்னவன் மனமுந் திருந்தும், நன்செய்நா
டுன்னது மாகும்.

புரு : உண்மை! ஓஹோ!

வண்டு மலரிடை யணையஉன் நாட்டிற்
கொண்டு விடுவரே போலும். நன்று!
கோதறு மிருபுறக் காத லன்றிஎம்
நாட்டிடை வேட்டன்மற் றில்லை மேலும்நம்
அரியணை இருவர்க் கிடங்கொடா தறிகுதி.

பலதே : (தனதுள்)

சுரிகுழல் வதுவை போனது சுகம்! சுகம்!

புரு :

ஆதலின் முடிவில்நீ ஓதிய தொழிக.
நன்செய்நா டதற்கா நாடிநீ நவின்ற
வெஞ்சொல் நினைதொறும் மேவிடும் நகையே
அடைக்கல மென்றுநம் மமைச்சரை யடைந்து
நடைப்பிணம் போலக் கடைத்தலை திரிந்து
முடியுடன் செங்கோல் அடியிறை வைத்துப்
புரவலர் பலர்வாய் புதைத்து நிற்க,
அனையர்தம் மனைவிய ரவாவிய மங்கல
நாணே யிரந்து நாணந் துறந்து
நெஞ்சு மெஞ்சவையில், அஞ்சா தெமது
நன்செய்நா டதனை நாவுகூ சாமற்
பாண்டியற் களிக்க என்றுரை பகர்ந்தும்,
ஈண்டுநீ பின்னு முயிர்ப்பது தூதுவன்
என்றபே ரொன்றால் என்றே யறிகுதி.
கருதா துனையிங் கேவிய கைதவன்
ஒருவா ரத்திற் குள்ளா யவன்முடி
யார்பகை இன்மையா லிதுகா றணிந்து
பார்வகித் தானெனப் பகரா தறிவன்,
விரித்துநீ யெம்மிடம் உரைத்த புரிசையும்,
அரிக்குநே ரென்னநீ யறைந்த அரசனும்
இருப்பரேற் காண்குவம் அவர்வலி யினையும்......
செல்லாய் விரைவில் தென்னன் போர்க்கு
வல்லா னென்னில் வாரமொன் றிற்குள்
துன்னிய சேனையுந் தானும்நீ சொன்ன
கடிபுரி பலமாக் காக்க இல்லையேல்,
முடிநம் அடியில் வைத்து நாமிடும்
ஆணைக் கடங்கி யமர்க. எமதிடம்
வீணுக் குன்னை விடுத்தகை தவற்கு
வஞ்சியான் மொழிந்த மாற்றமீ தெனவே
எஞ்சா தியம்புதி. ஏகாய் ! ஏகாய் !!

சொற்பொருள்

1. மலைய மன்னவ! - மலைநாட்டு வேந்தே!

2. பொங்கு + அலை - பொங்கலை; வினைத்தொகை. புணரி - கடல். புவி புகழ் சுமக்க - நிலவுலகம் எம் வேந்தனது புகழைச் சுமக்க.

4-7. குறுநில மன்னர்கள் தங்கள் குடங்கையிற் றலையைச் சாய்த்துத் தங்குவதற்கு இடம் பார்க்கின்ற விசாலமான முற்றத்தை யுடைய திருநெல்வேலி. குடங்கை - உள்ளங்கை. ஒன்னர் தலையொடு திகிரி உருட்டி - பகைவர் தலையை வெட்டி வீழ்த்தியும், ஆணைச் சக்கரத்தை எங்கும் செல்லுமாறு உருட்டியும்.

10. தந்திரம் - சேனை.

11. பொருந்தலர் - பகைவர்.

19. சாக்கியம் - சான்று.

23. இறுத்து - படை எடுத்து வந்து தங்கி.

29. உதியனும் செழியனும் - சேரனும் பாண்டியனும்.

34-37- அவ்வாறு எதிர்ப்பட்டவர் வேறு இடம் செல்லாமல் அப் படியே நிற்பாராயின், இருள் நீங்காமல் மூடிக்கொள்ளும் தன்மை போல சூரிய சந்திர மரபில் பிறந்த நீங்கள் இருவரும் எதிர்த்து நிற்பீராயின், உலகம் தாங்காது என்று எண்ணி என்னை ஏவி.

49. மீட்டு நல்கல் - திருப்பதீ தருதல்.

50. எஞ்சல் இல் - குறைவற்ற.

51. உசிதன் - பாண்டியன்.

54. தேடு அளி - தேடிச் செல்லும் வண்டு.

60-61. எங்கள் நாட்டில் தலைவன் தலைவியர் இருவர்க்கும் குற்ற மற்ற காதல் இயல்பாகவே உண்டானாலன்றித் திருமணம் நடைபெறாது. வேட்டல் - மணத்தல்.

69. அடி இறை வைத்து - அடியில் இறைப் பொருளாக வைத்து.

71. அவாவிய மங்கல நாண் - விரும்பிய தாலிக் கயிறு. பல மன்ன ரின் மனைவியர் தாலிப் பிச்சை இரந்து, நாணத்தையும் துறந்து, கெஞ்சி நிற்கும் எமது அவையின் கண்.

76. உயிர்ப்பது - உயிருடனிருப்பது.

79-81. யாருடைய பகைமை இல்லாத காரணத்தால் இது வரை பாண்டிய மன்னனின் முடி அவன் தலையில் நிலைத்து நின்றதென்பதை அவனே அறிவான்.

82. புரிசை - மதில்.

88. கடிபுரி - காவல் மிக்க மதிலை.

91. கைதவன் - பாண்டியன்.

வினாக்கள்

1. பலதேவன் சீவகபாண்டியன் புகழை எவ்வாறு எடுத்தோதினான் ?
2. பலதேவன் கூறிய தூது மொழிகள் யாவை ?
3. பாண்டியனும் சேரனும் போரிட்டால் நேரிடுவது யாது ?
4. நன்செய் நாட்டைப் பெற பலதேவன் கூறிய உபாயம் யாது ?
5. சேரன் கூறிய மாற்ற வுரைகளைத் தொகுத்து வரைக.

பயிற்சி

1. இப்பகுதியின் துணை கொண்டு பலதேவன், புருடோத்தமன் சீவகன் இவர்தம் பண்பாடுகளை ஆராய்ந் தெழுதுக.

2. இப்பகுதியின் வாயிலாகப் பண்டை நாளில் மன்னர்கள் தம் அவைக்கு வந்த தூதரை எவ்வாறு நடத்தினர் ? தூதர்க்குரிய இயல்புகள் யாவை ? என்பவற்றைச் சிந்தித் தெழுதுக.

3. பிரித்தெழுதுக :—அருந்திறல், தூதியான், அரியணை, தேடளி, இருபுறம், சகமெலாம், திரைக்கடல், செங்கோல்.

4. வாக்கியங்களில் அமைக்க :—மலைய மன்னவன், வழுதி, உதியன், முதுநகர், கதிர்க் கடுங் கடவுள், திரைக் கடலமுது, ஆழ்துயர்.

5. இருபெரு நாட்டு வேந்தர் போரிடுங்கால் நேரும் இன்னல்களைப் பற்றி 20 வரிகள் எழுதுக.

IV. சிறு நூல்கள்

1. திருவருணைக் கலம்பகம்

திருவண்ணுமலையில் உள்ள இறைவன்மீது பாடப்பட்டுள்ள நூல். இது. கலம்பகம் என்பது தமிழில் உள்ள 96 நூல் வகைகளில் ஒன்று. பதினெட்டு உறுப்புக்கள் அமையப் பலவகைப் பாக்களும், பாவினங்களும் விரவப் பாடுவது.

இதனை இயற்றியவர் எல்லப்ப நாவலர். இவர் கி. பி. 17-ஆம் நூற்ருண்டில் திருவெண்காட்டிற் கருகிலுள்ள இராதா நகரில் பிறந்தவர். சிறந்த புலமை உடையவர். இந்நூற்கு உரை செய்தவர்—நகராமலை, புலவர்—இராமலிங்கம் பிள்ளையாவார்.

சம்பிரதம்

[பல்வகை மாயவித்தைகளைச் செய்ய வல்லவர் தம் சிறப்பைத் தாமே சிறப்பித்துக்கூறிப் பலவகைச் செயற்கருஞ் செயல்களைச் செய்து காட்டுவதாகக் கூறுவதுபோல் பாடுவது இத்துறையின் இலக்கணமாகும்.]

பரவைபொ ருக்கெழவும், ககனம்வ டுப்படவும்
பரிதிவ டக்கெழவும், நிருதிகு ணக்குறவும்
இரவுப கற்படவும் பகலிர வொத்திடவும்
எளிதினி யற்றிடுவோ மிவைசில வித்தைகளோ ?
அரவம ணிப்பணியா னனலகி ரிப்பெருமான்
அருணகி ரிக்கிணையா வவனித லத்திடையே
கருதிம னத்தினிலே சிறிதுநி னைத்தளவே
கதியைய ளித்திடுமோர் பதியுமு ணர்த்துவமே !

சித்து

[இரசவாதம் செய்வோர் தமது திறமையை ஒரு தலைவனுக்கு எடுத்துக் கூறுவதாகப் பாடுவது இத்துறையின் இலக்கணம்.]

வீரத்தை அணிமழுவா ருமைபங் காளர்
விளங்கருணைச் சித்தர்யாம் விளம்பக் கேளா
காரத்தை எமக்கிடுகஞ் சத்தை யோகோ
கனகமெனக் காட்டிடுவோங் கரியோ ருக்குத்
தாரத்தைப் பொன்னுக வமைத்தோந் தம்பீ !
தாம் பரமும் பொன்னுகச் சமைத்தோ மிந்தப்
பாரத்தை யாரறிவார் ? அயனு கத்தைப்
பசும்பொனிற மாகவமே பாவித் தோமே !

சொற்பொருள்

1. பரவை பொருக்கு எழவும் - கடல் வற்றி பொருக்கு மண்கட்டிகள் தோன்றவும்? கடலில் ஒலி தோன்றவும்; ககனம் வடுப்படவும் - ஆகாயத்தில் தழும்பு உண்டாகவும்; காட்டில் மாவடு உண்டாகவும். சூரியன் உத்தராயண காலத்தில் வடபாரிசமாகச் செல்லவும் என இரண்டாவது உரை கொள்க. நிருதி - எண் திசைக் காவலருள் ஒருவன்; அரக்கி. குணக்கு - கிழக்கு; மாறுபட்ட குணம். இரவு பகல் படவும் - இரவு பகலாக மாறவும்; இரவில் சூரியன் மறையவும். பகல் இரவு ஒத்திடவும் - பகல் இரவைப் போலாகவும்; பகலும் இரவும் ஒரு அளவாகவும். பதி - தலம்.

2. தாரம் - தரா (ஒரு வகை உலோகம்). பொன் - தங்கம்; இலக்குமி. தம்பீ தாம்பரமும் பொன்னுக அமைத்தோம் - தம்பீ! செம்பையும் பொன்னுக்கினேம்; தம் பீதாம்பரத்தையும் பொன்னுக்கினேம். அயன் நாகத்தை - இரும்பை; (அயன் ஆகத்தை) பிரமனின் உடலை. பாரம் - பெருமை. ஆ! காரத்தை எமக்கு இடு - இது வியத்தற்குரியது; படிக்காரத்தை எமக்குக் கொடு; உணவை எமக்கு இடு. கஞ்சம் - தாமரை. கோகனம் - பொன்; தாமரை.

2. முக்கூடற்பள்ளு

முக்கூடற்பள்ளு: முக்கூடலைப் பற்றிய பள்ளு என்பது பொருள். பாண்டிய நாட்டின் கண் உள்ள திருமுக்கூடலில் எழுந்தருளியுள்ள திருமாலழகர்மீது பாடப்பட்டுள்ள நூல் இது. முன்னமொரு கால் சித்திரா நதியும், கோதண்டராம நதியும் இவ்விடத்தில் பொருநை யாற்றுடன் கலந்த காரணத்தினுல் இவ்வூர் 'முக்கூடல்' எனப் பெயர் பெற்றது.

இப்போது 'சீவலப்பேரி' என இது வழங்குகின்றது.

பள்ளு - ஒரு வகைத் தமிழ்ச் சிறுநூல். 'உழத்திப் பாட்டு' எனவும் பெயர் பெறும். இப்பாடற் பகுதி, உழத்தியர் இருவர் (மூத்த பள்ளி, இளையபள்ளி) தத்தம் நாட்டு வளம் கூறும் நிகழ்ச்சியை அறிவிப்பது.

இதன் ஆசிரியர் என்னயினுப் புலவர். காலம் கி. பி. 17-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி.

நாட்டுவளம்

மூத்தபள்ளி கூறுதல்

கறைபட் டுள்ளது வெண்கலைத் திங்கள்;
கடம்பட் டுள்ளது கம்பத்து வேழம்;
சிறைபட் டுள்ளது விண்ணெழும் புள்ளு;
திரிபட் டுள்ளது நெய்நெடுந் தீபம்;

குறைபட் டுள்ளது கம்மியர் அம்மி ;
குழைபட் டுள்ளது வல்லியங் கொம்பு ;
மறைபட் டுள்ளது அரும்பொருட் செய்யுள் ;
வளமை ஆசூர் வடகரை நாடே. 1

இளையபள்ளி கூறுதல்

காயக் கண்டது சூரிய காந்தி ;
கலங்கக் கண்டது வெண்தயிர்க் கண்டம் ;
மாயக் கண்டது நாழிகை வாரம் ;
மறுகக் கண்டது வான்சுழி வெள்ளம்
சாயக் கண்டது காய்குலைச் செந்நெல் ;
தனிப்பக் கண்டது தாபதர் உள்ளம் ;
தேயக் கண்டது உரைத்திடுஞ் சந்தம் ;
சீவல மங்கைத் தென்கரை நாடே. 2

சொற்பொருள்

1. பள்ளி - உழவர்குல மங்கை. மூத்தபள்ளி - பள்ளனுடைய முதல் மனைவி. கறை - களங்கம். கடம்பட்டுள்ளது - மதங்கொண்டுள்ளது. கம்பத்து வேழம் - கட்டுத்தறியில் பிணிக்கப்பட்ட யானை. சிறை - சிறகு. கம்மியர் - கற்றச்சர். ஆசூர் வடகரை நாடு - முக்கூடல் நகரை உள்ளடக்கிய நாட்டின் பகுதி. இந்நாட்டு மக்களில் குற்றம் பொருந்தியவரும், கடன் பட்டவரும், சிறைக் காவலில் உள்ளோரும், மனத்திரிபு கொண்டோரும், குறைவைக் கொண்டவரும் எவரும் இலர் என்பது.

2. காய்தல் - கோபித்தல்; சூரியன் காய்தல். மறுகல் - மயங்கல். சாய்தல் - ஒரு பக்கம் சாய்ந்து பேசுதல். சீவல மங்கைத் தென்கரை நாட்டின்கண் கோபிப்பவரும், கலக்கம் கொள்பவரும், குறைந்த வாழ்நாள் உடையவரும், மயங்கி உழல்பவரும், நடுவுநிலை தவறுபவரும், தனித்து வாழ்வோரும், உடல் நலம் குறைபவரும் எவரும் இலர் என்பது.

3. தொழிலாளர்

[பின்வரும் பாடல்கள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களால் இயற்றப்பட்ட 'புரட்சிக்கவி' என்ற நூலினின்றும் எடுக்கப்பட்டவை. இவர் புதுவையில் வாழ்ந்து வருபவர். இவரது இயற்பெயர் கனகசுப்பு ரத்தினம். நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த இச்சீர்திருத்தக் கவிஞர் பாண்டியன்பரிசு, அழகின் சிரிப்பு முதலிய பல நூல்களை இயற்றி யுள்ளார்.]

பேரன்பு கொண்டவரே! பெரியோரே! என்
பெற்றதாய் மாரே! நல் லிளஞ்சிங் கங்காள்!
நீரோடை நிலங்கிழிக்க நெடும ரங்கள்
நிறைந்துபெருங் காடாக்கப், பெருவி லங்கு
நேரோடி வாழ்ந்திருக்க, பருக்கைக் கல்லின்
நெடுங்குன்றிற் பிலஞ்சேரப், பாம்புக் கூட்டம்
போராடும் பாழ்நிலத்தை அந்த நாளில்
புதுக்கியவர் யார்? அழகு நகருண் டாக்கி! 1

சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கியநல் வாய்க்காலும், வகைப்ப டுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து, மலைபிளந்து, கனிகள் வெட்டிக்,
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு? 2

அக்கால உலகிருட்டைத் தலைகீ ழாக்கி
அழகியதாய் வசதியதாய்ச் செய்தார் தந்தார்?
இக்கால நால்வருணம் அன்றி ருந்தால்
இருட்டுக்கு முன்னேற்றம் ஆவதன்றிப்
புக்கபயன் உண்டாமோ? பொழுது தோறும்
புனலுக்கும், அனலுக்கும், சேற்றினுக்கும்,
கக்கும்விஷப் பாம்பினுக்கும், பிலத்தினுக்கும்,
கடும்பசிக்கும், இடையரு நோய்களுக்கும்; 3

பலியாகிக் கால்கைகள் உடல்கள் சிந்தும்
பச்சைரத்தம் பரிமாறி இந்த நாட்டைச்
சலியாத வருவாயும் உடைய தாகத்
தந்ததெவர்? அவரெல்லாம் இந்த நேரம்
எலியாக முயலாக இருக்கின்றார்கள்;
ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோன்
புலிவேடம் போடுகின்றான்; பொதுமக் கட்குப்
புல்லளவு மதிப்பேனுந் தருகின்றானா? 4

வினாக்கள்

1. சம்பிரதம் என்ற துறையின் இலக்கணம் யாது? இதனைப் பாடலுடன் பொருத்தி விளக்குக.
2. சித்தர்கள் செய்வதாகக் கூறிய செயல்கள் யாவை?
3. வளமை ஆசூர் வடகரை நாடு எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?
4. இளையபள்ளி தன் நாட்டு வளத்தை எங்ஙனம் கூறினாள்?
5. தொழிலாளர் செய்துள்ள தொண்டுகளை விவரி.

பயிற்சி

1. கலம்பகம்—பள்ளு இவற்றைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.
2. "பரவை பொருக் கெழவுங்"—இப்பாடலின் சிலேடைப் பொருளை விளக்கி எழுதுக.
3. சேர்த்தெழுதுக:—வெண்மை + கலை, விண் + எழும், பொருள் + செய்யுள், வடக்கு + கரை, சூரியன் + காந்தி, தயிர் + கண்டம், தெற்கு + கரை, நீர் + ஓடை, பெருமை + விலங்கு, காடு + ஆக்க.
4. வாக்கியங்களில் அமைக்க:—கலைத் திங்கள், வல்லியங் கொம்பு, அரும்பொருள், வெண் தயிர்க் கண்டம், வான்சுழி, தாபதர், இளஞ்சிங்கங்காள், பிலம், புலிவேடம்.
5. தொழிலாளர்களின் பெருமை கூறும் பாடல்களின் கருத்தை அயல் கூற்றுக மாற்றி எழுதுக.

V. புனைந்துரை

1. தமிழகம்

[பின்வரும் பாடல்கள் பெரு நாவலர் எஸ். சோமசுந்தர பாரதியார் எம். ஏ. பி. எல். அவர்களால் இயற்றப்பட்ட மாரிவாயில் என்னும் காவியத்தினின்றும் எடுக்கப்பட்டவை. இந்நூல் பாண்டவருள் ஒருவனான அருச்சுனனுக்கு அவன் மனைவியான பாண்டியநாட்டு அரசிளங்குமரி சித்திராங்கதை மேகத்தைத் தூதாக விடுத்த நிகழ்ச்சியைக் கூறுவது.

தமிழகத்தின் செல்வவளம், வாணிகச் செழிப்பு, கலைப்பெருக்கம் முதலியன இப்பாடல்களில் அழகுறப் புனைந்துரைக்கப் படுகின்றன.]

ஏவாமைத் தொழில்புரிவார் ; ஏற்பதறி
யாரியற்ற இயைந்து மல்கி,
தாவாமை விளையுளொடு தக்காருந்
தாழ்விலராந் தகையர் செல்வர்
ஓவாமை வளத்தொடுநல் லொளியுதவுங்
காவிரிபாய்ந் துதவு நாடு,
சாவாமை வண்மைதரும் புகழென்னு
முண்மையினைச் சாற்று நாடு ! 1

பண்புடையார் பழையர்தமிழ்ப் பாண்டியர்போல்
பாரிலிசை படைத்த சோழர்
தண்புனல்நாட் டவர்தகுதி சாற்றரிது ;
தலைநின்ற தமிழ மேழி
நண்புடைமை யாடவரும், நனிவிருந்தை
நல்லாரும் நாளும் பேணி
வண்புகழை வளர்த்திறவா வளச்சிறப்பை
வழங்கறமார் வாய்மை நாடு ! 2

கள்ளாறு நறுஞ்சோலைத் தண்படப்பை
கழனிபல களமர் சாறு
தள்ளாத வளமனைத்தும் தரும்புனல்நா
டுடைத்தவத்தர் தம்மை என்றும்

நள்ளாரும் வளவரென நவில்செவ்வி
படைத்தாக்கம் நல்கி யோடும்
வெள்ளாறு பாலாறு விரிபெண்ணைத்
தமிழ்க்காட்சி விழைந்து காண்பை ! 3

காவிரிவெள் ளாறுவிரி பாலாறு
பெண்ணையெனக் காம்பு நாலாய்ப்
பூவிரிதண் புனனுட்டைச் சுரந்தூட்டும்
மடியுடைய பொற்பி னல்லான்
பாவிரிசெந் தமிழ்தழுவு நீண்மலயப்
பயனனைத்தும் பம்பும் நாட்டில்
நாவிரிபுள் ளினமிழற்றும் பண்ணுர்ந்து
நில்லாது நடப்பை விண்ணே ! 4

சொற்பொருள்

1. ஏவாமை - ஏவாமல். இயற்ற - முயற்சியோடு தொழில் புரிய. தாவாமை - கெடாத தன்மையையுடைய. ஓவாமை - இடைவிடாது பெருகுகின்ற. ஒளி - புகழ். சாவாமை வண்மை தரும் புகழ் - உலகின் கண் என்றும் அழியாது நிலைத்திருப்பது உண்மையுடன் கூடிய புகழ் ஒன்றே. "ஒன்ரு உலகத்து உயர்ந்த புகழல்லால் பொன்ருது நிற்ப தொன்றில்" என்ற பகுதியை ஒப்பு நோக்குக.

2. தமிழமேழி - தமிழ்நாட்டு உழவு. ஆடவர் நண்புடைமையையும் நல்லார் தனி விருந்தையும் நாளும் பேணி. அறம் + ஆர்-அறமார் ; அறத்தையுடைய.

3. கள் - தேன். படப்பை - தோட்டம். களமர் - உழவர். சாறு - திருவிழா. நள்ளாரும் - பகைவரும். செவ்வி - அழகு. தமிழ்க்காட்சி - இனிய காட்சி; தமிழ் தழீஇய சாயலவர் என்ருற்போல. காண்பை - காண்பாய். (மேகத்தைக் காணுமாறு கூறுகின்ருள்).

4. ஆன் - பசு. மலயம் - பொதியமலை. பம்பும் - நிறைந்துள்ள. மிழற்றும் பண்ஆர்ந்து - இசைக்கின்ற பண்ணினை நுகர்ந்து.

2. கோடை நாற்பது

['கோடை' என்பது மதுரை மாவட்டத்தில் உள்ள கோடைக் கானல் மலையைக் குறிப்பதாகும். அம்மலையின் வளத்தைக் கூறும் 40 பாக்களை உடைமையால் இந்நூல் கோடை நாற்பது எனப்பட்டது.

இதன் ஆசிரியர் : கதி சுந்தரம் அவர்கள். நாவன்மையும் பாநலமும் மிக்க இவ்வாசிரியர் கோடை மலையில் வதிந்து தாம் நேரில் கண்டு இன்புற்ற வளங்களை மிக அழகுபடப் பாடியுள்ளார்.]

கோடை மலைக் காட்சி

விண்ணுலகைத் தொட்டங்கே வெல்லும் மலைக்காட்சி
எண்ணத்தில் கொண்டுவரும் இக்கருத்தை ;—மண்ணின்மேல்
எண்ணம் உயர்ந்தாலே எய்திடலாம் வாழ்வினை ; நல்
எண்ணம் உயர்க இனிது !

காட்டில் திருவிழா

குடைபிடிக்கும் சூழ்கொடிதான் ; கூடிவரும் வண்டோ
கடமைத் திருப்பாட்டைக் காதில்—தடையின்றி
ஊட்டிவரும், பூக்கள் உதிர்ந்துவிடும் ; புள்வாழ்த்தும்
காட்டில் திருவுலாக் காண்.

கோடை செல் கூட்டம்

ஆலமரச் செம்பழத்திற் காடிவரும் புள்ளினமும்
சீலமுகங் காட்டிச் சிரித்தளிக்கும்—கோலமிகு
வள்ளற்கை நோக்கி வரும்வறியர் கூட்டமும்போல்
தெள்கோடை சென்றிடுவர் சேர்ந்து.

சொற்பொருள்

1. உயர்ந்தோங்கும் மலைக் காட்சி இக்கருத்தை எண்ணத்தில் கொண்டுவரும் எனக் கூட்டுக.

2. மலையரசி திருவுலா வருகின்றாள். கொடிகள் குடைபிடிக்கின்றன ; வண்டுகள் இனிய பண் பாடுகின்றன. மலர்கள் உதிர்ந்து வீழ்ந்து வரவேற்கின்றன. பறவைகள் கவிஞர்போல் வாழ்த்துக் கூறுகின்றன.

3. ஆலம் பழத்திற்கு வரும் புள்ளினத்தையும், வள்ளலின் வண்மையை நாடிச் செல்லும் வறியர் கூட்டத்தையும்போலக் 'கோடையில்' மக்கள் திரளாகக் கூடுவர்.

வினக்கள்

1. காவிரி நாடு எத்தகைய வளங்களையுடையது?
2. எதனை உண்மை எனத் தமிழ்நாடு சாற்றியுள்ளது?
3. புனல் நாட்டு ஆடவரும் மகளிரும் எத்தகையர்?
4. சோழ நாட்டவரைப் பகைவரும் எவ்வாறு போற்றுகின்றனர்? இவ்வாறு போற்றக் காரணம் யாது?
5. கோடை மலைக் காட்சி எத்தகைய எண்ணத்தை எழுப்புகின்றது?
6. காட்டில் நடைபெறும் திருவுலாக் காட்சியினை வரைக.
7. கோடையில் கூடும் மக்களுக்குக் கூறப்பட்ட உவமைகள் யாவை?

பயிற்சி

1. இப்பாடல்களில் வந்துள்ள பண்புத்தொகை முதலாகிய தொகைகளை எடுத்தெழுதுக.
2. தமிழ்நாட்டு வளங்களைத் தொகுத் தெழுதுக.
3. பிரித்தெழுதுக :—சாற்றுநாடு, தமிழமேழி, தண்புனல், நீண்மலையம், வழங்கறம், நறுஞ்சோலை, புனனுடு, பண்ணுர்ந்து.
4. கோடை மலையைச் சிறப்பித்து 15 வரிகள் எழுதுக.

VI பல்சுவை

[பின்வரும் பாடல் இறையனூரால் பாடப்பட்டு குறுந்தொகையில் சேர்க்கப்பட்டுள்ளது. பாண்டியன் தன் மனைவியின் கூந்தல் மணம் இயற்கையா அன்றிச் செயற்கையா என ஐயுற, அதனைத் தீர்த்தற்காகப் பாடப்பட்டது.]

1. இயற்கை மணம்

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ!
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ யறியும் பூவே?

சொற்பொருள்

கொங்கு - பூந்தாது. தேர் - ஆராய்கின்ற. தும்பி - வண்டே! காமம் செப்பாது - என்மீது கொண்ட அன்பிற்காகச் சொல்லாமல். மொழி - சொல்லுவாயாக. மோ - முன்னிலையசை. பயிலியது கெழீஇய நட்பு - நெருங்கிப் பழகிய நட்பு. செறி எயிறு - நெருங்கிய பல் வரிசை. அரிவை - பெண். நறியவும் உளவோ - நறுமணம் மிகுந்தனவும் உண்டோ. கெழீஇய - சொல்லிசையளபெடை.

2. வாணிகர்

[இப்பாடற்பகுதி பத்துப் பாட்டினுள் ஒன்றாகிய பட்டினப்பாலையில் உள்ளது. இந்நூல் சோழன் கரிகாலனது தலைநகராகிய காவிரிப்பூம் பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறுவது. இதனைப் பாடியவர் உருத்திரங் கண்ணனார்.]

நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்;
வடுவஞ்சி வாய்மொழிந்து,
தமவும்பிறவும் ஒப்பநாடிக்,
கொள்வதூஉம் மிகைகொளாது,
கொடுப்பதூஉம் குறை கொடாது,
பல்பண்டம் பகர்ந்து வீசும்
தொல்கொண்டித் துவன்றிருக்கை.

சொற்பொருள்

நெடுநுகம் - நீண்ட நுகத்தடி. பகல் - நுகத்தடி நடுவில் பொருத்தப் பட்டுள்ள சிறு ஆணிபோன்ற முளை. வடு - குற்றம். வாய் - உண்மை. தம - தம்முடைய பொருள். மிகை - மிகுதி. பகர்ந்து வீசும் - விலை கூறி விற்கின்ற. கொண்டி - திரண்ட செல்வம். துவன்று - நிறைந்த. கொள்வதூஉம் - கொடுப்பதூஉம் - இன்னிசை யளபெடைகள்.

3. மதில்கெழு காஞ்சி

[பின்வரும் பாடல் தொண்டை நாட்டின்கண் அமைந்த காஞ்சி நகரின் பெருமையை அழகுற விரித்து உணர்த்துவது. பஃறொடை வெண்பாக்களில் சிறந்து நிற்பது.]

வையக மெல்லாங் கழனியா வையகத்துட்
செய்யகமே நாற்றிசையின் தேயங்கள் ; செய்யகத்துள்
வான்கரும்பே தொண்டை வளநாடு ; வான்கரும்பின்
சாறேயந் நாட்டிற் றலையூர்கள் ; சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெலாங் கட்டியுள்
தானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றான் **கச்சி யகம்.**

சொற்பொருள்

கழனி - மருதநிலம். செய்யகம் - வயல். அந்நாட்டின் தலையூர்கள் - அத்தொண்டை நாட்டின் தலைசிறந்த நகரங்கள். சாறுஅட்ட - சாற்றைக் காய்ச்சிய. கட்டி - வெல்லக்கட்டி. கச்சிப்புறம் - காஞ்சீபுரத்தைச் சுற்றியுள்ள பகுதி. ஆனேற்றான் - சிவபெருமான்.

உலகம் ஓர் மருத நிலமாகவும், நாற்றிசையிலுமுள்ள நாடுகள் அம் மருதத்திலுள்ள வயலாகவும், தொண்டைநாடு அவ்வயலிலுள்ள கரும் பாகவும், தொண்டை நாட்டுத் தலையூர்கள் அக்கரும்பின் கண் உள்ள சாறாகவும், காஞ்சியைச் சூழ்ந்துள்ள பகுதி அச்சாற்றைக் காய்ச்சிய தீங்கட்டியாகவும், காஞ்சிமாநகர் அக்கட்டியினின்றும் எடுத்த சர்க்கரை யாகவும் கூறப்பட்டுள்ளன.

4. எவ்விடம் புகுவேம்?

[இப்பாடல் நந்திவர்ம பல்லவன்மீது பாடப்பட்டுள்ள நந்திக்கலம் பகத்தின்கண் உள்ளது. நந்திவர்மனின் கொடை, கல்வி, வீரம், அழகு முதலியவற்றை இப்பாடல் அணிபெற உணர்த்துகின்றது.]

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்;
வையகம் அடைந்ததுன் சீர்த்தி;
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்;
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்;
தேனுறு மலராள் அரியிடஞ் சேர்ந்தாள்;
செந்தழல் புகுந்ததுன் மேனி;
யானும்என் கவியும் எவ்விடம் புகுவேம்?
எந்தையே! நந்திநா யகனே!

சொற்பொருள்

வதனம் - முகம். தேன்உறும் மலராள் - திருமகள். அரி - திருமால். செந்தழல் புகுந்தது உன்மேனி - உன் உடல் நிறம் தழலில் சென்று மறைந்துள்ளது. (உடல் அத்தகைய செந்நிறம் வாய்ந்தது.)

5. உயிர்க்காப்பு (இன்ஷியூரன்ஸ்)

[இப்பாடல் புலவர் த. முருகேசன் அவர்களால் இயற்றப்பட்டது. இவர் இந்நூல் தொகுப்பாசிரியர்களுள் ஒருவர்.]

ஒரு தலைவன் பேருழைப்பால் ஒருகுடும்பம்
வாழ்கின்ற உலுத்தர் நாட்டில்,
ஒருதலைவன் மறைவின்பின் உடையுணவு
ஒருங்கிழந்து உலர்ந்து சோர்வர்;
அருநிதியாஞ் சேமிப்பில் அவரவரால்
இயன்றவரை அணுவாய்ச் சேர்த்துப்
பெருநிதியாய் ஒருசேரப் பெட்புடனே
பெற்றவர்தாம் பெரிதும் வாழ்வர்.

உலுத்தர் நாட்டில் - சோம்பலுடையார் நிறைந்த இந்நாட்டில், பெட்புடன் - விருப்பத்தோடு.

வினாக்கள்

1. வண்டின்பால் வினவப்பட்டது யாது? இதனால் அறியப்படுவ தென்ன?
2. புகார் வாணிகர் எத்தகைய நெறியினைப் பெற்றுள்ளனர்?
3. காஞ்சிமா நகர் எவ்வாறு உருவகம் செய்யப்பட்டுள்ளது?
4. நந்திவர்மனின் புகழ், வீரம் முதலியவை எவ்வாறு கூறப் பட்டன?
5. பெரிதும் இன்புற்று வாழ்பவர் யார்?

பயிற்சி

1. "வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்பிறவும் தமபோற் செயின்" என்ற குறட்பாவினை இரண்டாவது பாடலுடன் ஒப்பிட்டு விளக்குக.
2. சேர்த்தெழுதுக :—மயில் + இயல், எயிறு + அரிவை, நன்மை + நெஞ்சு, வடு + அஞ்சி, பல + பண்டம், செய் + அகம், நான்கு + திசை, ஆன் + ஏற்றான்.
3. பிரித்தெழுதுக :—அஞ்சிறை, தொல்கொண்டி, துவன் றிருக்கை, வையகத்துள், வளநாடு, செந்தழல்.
4. "வானுறுமதியை"—என்று தொடங்கும் பாடலின் கருத்தை விளக்கி எழுதுக.
5. "உயிர்க்காப்பு நிதி"—என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

உரைநடைப் பகுதி

1. பண்டை உரைநடை

[அடியார்க்கு நல்லார்]

குமரியொடு வடவிமயத் தொருமொழி வைத்துல காண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்றுச் சோழன் மகளீன்றமைந்தன் கொங்கர்செங் களம்வேட்டுக் கங் கைப் பேரியாற்றுக் கரைபோகிய செங்குட்டுவன் சினஞ் செருக்கி வஞ்சியுள்வந் திருத்தகாலை வடவாரிய மன்ன ராங் கோர் மடவரலை மாலைசூட்டி யுடனுறைந்த விருக்கை தன்னிலொன்று மொழிநகையினராய்த் தென்றமிழ்நாடா ளும் வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து மின்றவழு மிமய நெற்றியில் விளங்குவிற்புலி கயல்பொறித்தநா ளெம்போலு முடிமன்னரீங் கில்லைபோலு மென்ற வார்த்தை யங்குவாழுமாதவர்வந் தறிவுறுத்த விடத்தாங்க ணுருள்கின்ற மணிவட்டைக் குணில் கொண்டு துரந் தது போ லிமய மால்வரைக் கற்கடவுளா மென்றவார்த்தை யிடந்துரப்ப வாரியநாட்டரசோட்டி யவர்முடித்தலை யணங்காகிய பேரிமயக் கற்சுமத்திப் பெயர்ந்துபோந்து நயந்த கொள்கையிற் கங்கைப்பேர் யாற்றிருந்து நங்கை தன்னை நீர்ப்படுத்தி வெஞ்சினந்தரு வெம்மைநீங்கி வஞ்சிமாநகர்ப் புகுந்து நிலவரசர் நீண்முடியாற் பலர்தொழு படிமங்காட்டி அப்பூசலாட்டியைக் கடவுண் மங்கலஞ் செய்தபின்னுட் கண்ணகி தன்கோட்டத்து மண்ணரசர் திறைகேட்புழி யலம்வந்த மதிமுகத்திற் சிலசெங்கய னீருமிழப் பொடியாடிய கருமுகிறன் புறம் புதைப்ப வறம்பழித்துக் கோவலன்றன் வினையுறுத்துக் குறுமகனாற் கொலையுண்ணக் காவலன்ற னிடஞ்சென்ற கண்ணகிதன் கண்ணீர்கண்டு மண்ணரசர் பெருந் தோன்ற லுண்ணீரற் றுயிரிழந்தமை மாமறையோன் வாய்க்கேட்டு மாசாத்துவான் றன்றுறப்பவு மனைக்கிழத்தி யுயிரிழப்பவு மெனப்பெருந் துன்பமெய்திக் காவற்பெண்டு மடித்தோழியுங் கடவுட்சாத்த னுடனுறைந்த தேவந்தியு

முடன்கூடிச் சேயிழையைக் காண்டுமென்று மதுரைமா நகர்புகுந்து ஊர்வெந்தபடி கேட்டாங் கடைக்கலமிழந் துயிரிழந்த விடைக்குலமக ளிடமெய்தி யையையவண் மகளோடும் வையையொரு வழிக்கொண்டு–மாமலைமீமிசை யேறிக் கோமகடன் கோயில்புக்கு நங்கைக்குச் சிறப் பயர்ந்த செங்குட்டுவற்குத் திறமுரைப்பர்.

சொற்பொருள்

ஒரு மொழி வைத்து - ஒரே மொழியாகிய தமிழை ஆட்சி மொழியாக வைத்து. வேட்டு - வேள்வி செய்து. மடவரல் - பெண். செருவேட்டு - போரை விரும்பி. நெற்றி - உச்சி. குணில் - குறுந்தடி. படிமம் - உருவச்சிலை. பூசலாட்டி - கண்ணகி. அலம்வந்த - வருந்திய. துறப்ப - உயிர் நீங்க. காண்டும் - பார்ப்போம். சிறப்பு அயர்ந்த - விழாக் கொண்டாடிய.

வினாக்கள்

1. செங்குட்டுவன் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றான் ?
2. வடவேந்தர் கூறிய சொற்கள் யாவை ?
3. வடவேந்தர் தமிழ் இகழ்ந்தமையை செங்குட்டுவன் எவ்வாறு அறிந்தான் ?
4. கோவலன் இறந்த செய்தி கேட்டதும் உயிர் துறந்தோர் யாவர்?
5. சிறப்பயர்ந்த செங்குட்டுவனுக்குத் திறமுரைத்தோர் யார் ?

பயிற்சி

1. இப்பகுதியின்கண் அடங்கியுள்ள வரலாற்றை உமது சொந்த நடையில் எழுதுக.

2. கொங்கர் செங்களம்வேட்டு, அலம்வந்த மதிமுகத்திற் சில செங்கயல் நீர் உமிழ, அடைக்கல மிழந்துயி ரிழந்த இடைக் குலமகள்— இவற்றை விளக்குக.

3. சேர்த்தெழுதுக :—சினம் + செருக்கி, தெற்கு + தமிழ், வில் + புலி, அறிவு + உறுத்த, பெருமை + இமயம், செம்மை + இழை, கடவுள் + சாத்தன்.

4. செங்குட்டுவன் வடநாடு சென்று கண்ணகிக்குக் கல்கொணர்ந்த நிகழ்ச்சியை விளக்கி வரைக.

2. பண்டைத் தமிழரசரும் புலவரும்

[பண்டித வித்துவான் லெ. ப. கரு. இராமநாதஞ் செட்டியார்]

நோக்கம்

இத்தண்டமிழ் நாட்டைப் பன்னெடுங்காலம் ஆண்ட பழந்தமிழ்க் குடிமக்களாகிய சேர சோழ பாண்டியர்களே பண்டைத் தமிழரசராவர். அவ்வரசர் காலத்திலிருந்த நல்லிசைப் புலவர்களே ஈண்டுப் புலவரெனப்பட்டவராவர். ஈண்டுக் குறிக்கப் பெற்ற காலம் சங்க காலமாகும். அவ்வரசர்களின் கலைவன்மை, செங்கோல் மாண்பு, வீரத்திறன், வள்ளன்மை முதலிய சிறப்பியல்புகளையும், புலவர் பெருமக்களின் உயர்ந்த பண்புகளையும், புலவரிடத்து அரசர் வைத்திருந்த நன்மதிப்பினையும், நட்பையும் சில எடுத்துக் காட்டுகளின் மூலம் விளக்குதலே, இக்கட்டுரையின் நோக்கமாகும். இவற்றை உணர்த்தற்குப் புறநானூறு, பதிற்றுப்பத்து முதலிய சங்க நூல்களுள் சில துணையானவாம்.

கலைவன்மை

இவற்றுள், அவ்வரசர் தம் கலைவன்மையைப் பற்றிக் கூறுங்கால், அதனைப் பிறர் புகழ்வதாகக் கூறும் எடுத்துக் காட்டைவிட, அவர்தம் பாடல்களே தக்க சான்றாகும். ஆதலின், சேரருள் பாலை பாடிய பெருங் கடுங்கோ, சேரமான் கணைக்கால் இரும்பொறை முதலியோரும், பாண்டியருள் ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் முதலியோரும், சோழருள் சோழன் நலங்கிள்ளி, சோழன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் முதலியோரும் பாடியவை சங்க நூல்களில் காணப்படுதல் கொண்டு உணரலாம். பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு பாடிய பாடல் புறநானூற்றிற் காணப்படுதலால், அவ்வரசர் மகளிரும் நன்கு கற்றுப் பாடலியற்றும் பெற்றி வாய்ந்திருந்தனர் என்பது புலனாகும். அவர்தஞ் செங்

கோன் மாண்பை, ‘நீதி மன்றங்களில் அறநெறி தவறிய ஒருவனை வைத்துக் கொடுங்கோல் செய்தேனாகுக,’ என ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியனும், ‘என் நிழலில் வாழுங் குடிகள் தாம் சென்றடையும் நிழலைக் காணாது, ‘எம் இறைவன் கொடியன்’ எனக் கண்ணீர் விட்டுப் பழி தூற்றுங் கொடுங்கோலனாகுக,’ எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் வஞ்சினங் கூறுதலானும், ‘குடி மக்களை இறை வேண்டி இரக்கும் ஆண்மையில்லாத சிறியோன் அரசுரிமையைப் பெற்றால் அது அவனுக்குத் தாங்க முடியாத கனமுடைய தாகும்,’ எனச் சோழன் நலங்கிள்ளி கூறுதலானும், ‘நின் நிழல் வாழ்வோர் சூரியனது வெம்மை யல்லாது வேறு வெம்மையை அறியார்,’ எனச் சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைக் குறுங் கோழியூர் கிழார் பாடுதலானும் பிறவற்றாலும் உணரலாம்.

வீரம்

அவர்தம் வீரத்திறனை, ‘யமன் கோபித்துவரினும் அதனையும் மாற்றும் வலியுடையை’ என ஒரு சேரனிடம் ஒரு புலவரும், ‘கருக்கொண்ட மகளிர் விரும்பி உண்டா லல்லது பகைவரால் உண்ணப்படாத மண்ணையுடையை,’ என மற்றொரு சேரனிடம் மற்றொரு புலவரும் கூறுத லானும், ‘தேர் மொட்டுப் பொலிவு பெற நின்றவன் யாவனோ? அவன் கண்ணி வாழ்க! ஐம்படைத்தாலி கழித் ததும் இலன்; பாலுண்டலை ஒழித்து உணவும் இன்றுதான் உண்டான்; தன் மேல் வெகுண்டு வந்த வீரரை மதித் ததும் அவமதித்ததும் இலன். அவரைத் தான் கொன்ற தற்கு மகிழ்ந்ததும் இவ்வாறு செய்தோம் என்று தன்னை மேம்பட நினைத்தது மிலன்,’ என ஒரு பாண்டியனை ஒரு புலவர் பாராட்டுதலானும், ‘சோழனோடு மாறுபட்டோர் வாழக் கண்டதுமில்லை; அவன் அடி அடைந்தோர் வருந் தக் காணுதல் அதனினுமில்லை,’ என ஒரு சோழனை ஒரு புலவர் புகழ்தலானும், அவர்தம் வெற்றி யுணர்த்தும் பிற வரலாறுகளாலும் நன்கு தெரியலாம்.

வண்மை

அவர்தம் வள்ளன்மையை 'இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் தனித்துண்ணுர்; யாரிடத்தும் வெறுப்பிலர்; புகழ் கிடைக்கின் தம் உயிரையுங் கொடுப்பார்; பழி வருமாயின் அதனுல் உலக முழுதும் பெறினும் கொள்ளார்; தமக்கென முயலாத வலிய முயற்சியையுடைய பிறர்க்கென முயலும் அத்தகையார் உண்மையால் இவ்வுலகம் உளது,' எனக் கடலுண் மாய்ந்த இளம்பெரு வழுதி கூறுதலானும் 'ஈயென இரப்பாராயின் என் அரசாட்சியைக் கொடுத்தல் எளிது. என் இனிய உயிரையுங் கொடுப்பேன்,' எனச் சோழன் நலங்கிள்ளி கூறுதலானும், 'நின்னைப் பாடிய செந்நா, பிறர் புகழைச் சொல்லா வண்ணம் நினக்கென ஒன்றையும் பாதுகாவாமற் கொடுக்கும் எங்கோவே' என ஒரு சேரனிடம் ஒரு புலவர் கூறுதலானும் அறியலாம். சேரர் தம் கொடைப் பெருமையைப் பதிற்றுப்பத்தில் ஒரு சேரன் ஒரு புலவர்க்கு நாற்பது நூருயிரம் பொன்கொடுத்து, தான் ஆள்வதிற் பாகம் கொடுத்தான் என்பதும், மற்ருெரு சேரன் மற்ருெரு புலவர்க்கு நூருயிரங் காணங்கொடுத்து, ஒரு மலையிலேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம் கொடுத்தான் என்பதும், பிறவும் காணப்படுதல் கொண்டு நன்கறியலாம்.

பெருமிதம்

இவ்வாறே ஒவ்வொரு பண்பையும் விரித்துக் கூறிற் பெருகுமாதலின் இன்றியமையாத சில கூறி, இவ்வளவில் நிறுத்திப் புலவர் பெரு மக்களின் உயர்ந்த பண்புகளைக் கூறுவேன்.

> "பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
> செய்யா கூறிக் கிளத்தல்
> எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே" (புறம்–148)

என ஒரு புலவரும்

"வையக வரைப்பிற் றமிழகங் கேட்பப்
பொய்யாச் செந்நா நெளிய வேத்திப்
பாடுப வென்ப பரிசிலர்" (புறம்–168)

என ஒரு புலவரும் பாடுதலால் இல்லாதவற்றைச் சொல்லாத பொய்யா நாவினர் என்பதும் ;

"பொய்யா நாவிற் கபிலன் பாடிய
மையணி நெடு வரை" (புறம்–174)

எனக் கபிலரை நப்பசலையாரும் புகழ்ந்திருத்தலால், பொருமையின்றிச் சிறந்தாரை உயர்த்திக்கூறும் நல்லியல்பினர் என்பதும் நன்கு அறியப்படும். பெருஞ்சித்திரனர் அதியமானெடுமானஞ்சியுழைச் சென்றபோது அவன் தம்மை நேரிற் காணுது, இது கொண்டு செல்லுக,' என்று பிறர் மூலம் பரிசில் கொடுப்பக் கொள்ளாது,

"காணுதீத்த இப்பொருட்கி யானோர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினும் இனியவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே" (புறம்–208)

எனக் கூறுதலானும், வெளிமான் தம்பி சிறிது பரிசில் கொடுப்ப, அவர் கொள்ளாது சென்றமையாலும், சேரமான் குடக்கோச் சேரல் இரும்பொறை பரிசில் கொடுப்பதற்குக் காலந் தாழ்க்க, அவனை எதிர்பாராது 'பெருங்குன்றூர்க்கிழார்' சென்றமையாலும், பிறவற்றுலும், தம்மை மதியாரிடத்தும், சிறிது கொடுத்தாரிடத்தும், கொடுப்பதற்குக் காலம் தாழ்த்தாரிடத்தும் பரிசில் பெருத பெருந்தன்மையுடையார் என்பது அறியப்படும்.

இளங்கண்டீரக்கோவும், இளவிச்சிக்கோவும் ஒருங்கிருந்த வழிச் சென்ற பெருந்தலைச் சாத்தனர் கண்டீரக்கோவைத் தழுவி விச்சிக் கோவைத் தழுவாராக அவன், 'என்னை ஏன் தழுவவில்லை?' எனக் கேட்டபோது, புலவர் 'உன் முன்னோர் பாடுநர்க்கு அடைத்த கதவுடையராதலின், உன்னைத் தழுவவில்லை. கண்டீரக்கோ, மகளிரும் ஆடவரும் கொடையிற் சிறந்து விளங்கும் நற்குடிப் பிறந்தவனுதலின், அவனைத் தழுவினேன்' எனக் கூறியதனுல், புலவரை மதியாதவரைத் தாமும் மதியார்

என்பதனை நன்கு அறியலாம். 'வேந்தே! வெண் கொற்றக் குடை வெயில் மறைத்தற்குக் கொள்ளப்பட்ட தன்று; குடிகளுக்கு நிழல் செய்தல் பொருட்டுக் கொள் ளப்பட்டது' எனவும், 'புலவர் மாட்டுப்பொது நோக் கொழி' எனவும் பிறவுங் கூறுதலால், புலவர் அரசர்க்கு உறுதியை அஞ்சாமற் கூறும் நெஞ்சினர் என்பது துணி யப்படும். சோழன் நலங்கிள்ளி உறையூர் முற்றியிருந்தா னையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் சந்து செய் தற்குக் கோவூர்கிழாரும், மக்கள் மேற்சென்ற கோப் பெருஞ் சோழனைச் சந்து செய்யும் நோக்கத்தாற் புல் லாற்றூர் எயிற்றியனாரும், வையாவிக் கோப்பெரும் பேகனால் துறக்கப்பட்ட கண்ணகியை அவனோடு சேர்த் தற்கு அரிசில்கிழார் முதலிய புலவரும் பாடியிருத்தலால் மாறுபட்டாரைச் சேர்க்கும் ஆற்றலும் நற்குணமும் வாய்ந்தவரென்பது புலப்படும்.

மாட்சிமை

இனி, புலவரிடத்து அரசர் வைத்திருந்த மதிப்பு எத் தகையதென்பதை உற்று நோக்கின் அது மிகவும் வியப்பைத் தருவதாகும். புலவர்மாட்டுச் சேரர் தனி மதிப்பு வைத்து இருந்தனர் என்பதற்குச் சேரமான் தகடூரெறிந்த பெருஞ் சேரலிரும்பொறையின் வரலாறு ஒன்றே தக்க சான்றாகும்; அஃதியாதெனின், முற் காலத்து அரசர் முரசில் தெய்வமிருப்பதாகக் கருதி அதை நீராட்டி அலங்கரித்துச் சிறந்த கட்டிலில் வைத்துப் பூசை செய்வதும், அக்கட்டிலில் யாரேனும் ஏறினால் அவர்களைக் கொல்வதும் வழக்கம். சேரமான் தகடூ றெறிந்த பெருஞ் சேரலிரும் பொறைபாலும் அவ்வியல் பிருந்தது. ஒரு நாள் வழக்கப்படி முரசு நீராட்ட எடுத்துச் செல்லப் பெற்றிருந்தது; அவ்வமயம் நெடுந் தூரமிருந்து அங்கு வந்த மோசிகீரனார் என்னும் புலவர் களைப்பு மிகுதியால் முரசு வைக்கும் கட்டில் என்ப தறியாது அதில் ஏறித் துயின்றனர்; அஃதறிந்த அரசன் புலவராதலின் அவரைக் கொல்லாததோடமையாது, அவர்

நன்கு துயிலும் வண்ணம் கவரிகொண்டு வீசினன்; பின்னர் அது கண்ட புலவர் அவனைப் பெரிதும் பாராட்டினர் என்பதாம். அன்றியும், 'என் வெற்றிச் சிறப்பைப் புகழ்ந்து பாடுவதற்கு இன்று கபிலரில்லையே!,' என்று சேரன் மாந்தரஞ் சேரலிரும்பொறை வருந்தியதாகப் பொருந்தில் இளங்கீரனுர் கூறுவதும் அதனை வலியுறுத்துவதாம்.

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடி மருதன் தலைவனுக உலகமொடுநிலைஇய பலர் புகழ் சிறப்பிற், புலவர் பாடாது வரைக என்நில வரை" (புறம் 72) எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாடுவதனுல், பாண்டியர் புலவர் மாட்டும் அவர் பாடலிடத்தும் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தனர் என்பது புலனுகும்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், மலையமான் மக்களை யானைக்கிடுவுழிக் கோவூர்கிழார், கொல்லலாகாதென அவனைப்பாட அவன் கொல்லாது விட்டமையாலும், சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தானும், தாமப்பல் கண்ணன் என்னும் புலவரும் வட்டாடும்போது புலவர் கைகரப்பச் சோழன் வட்டு கொண்டெறிந்தான். அவனைப் புலவர் வெகுண்டு, 'நீ சோழன் மகனல்லை' என வைதனர். அது கேட்ட சோழன் புலவரைச் சினவாது நாணியிருந்தனன் என்னும் வரலாற்றுல் சோழர்க்குப் புலவர்பாலிருந்த பெருமதிப்பு விளங்குவதாம்.

இனிக் கோப்பெருஞ் சோழனுக்காகப் பிசிராந்தையாரும் பொத்தியாரும் உயிர் துறந்த வரலாறென்றே புலவர்க்கும் அரசர்க்கும் இருந்த ஒப்புயர்வற்ற நட்பின் மாண்பை விளக்குவதாம். இவ்வரலாறு பலரும் அறிந்ததாகலின் விரிக்கப்படவில்லை.

இங்ஙனம் பெருஞ் செல்வராய பண்டைத் தமிழரசரெல்லாம் செல்வத்தால் வரும் இன்ப மொன்றையே கருதிச் செருக்கில் மூழ்காது, கல்வியின் அருமை உணர்ந்து நன்கு கற்று, கல்வியிடத்தும் கற்ருர் மாட்டும்

பெரிதும் மதிப்பு வைத்திருந்தது போல, இக்காலத்துச் செல்வர்களும் கல்வியிடத்தும் மதிப்பு வைத்துப் போற்றுவராயின், அதுவே இக்கட்டுரையின் பயனாகும்.

சொற்பொருள்

பீடு - பெருமை. பெருமிதம் - வீரம். வள்ளன்மை - வரையாது கொடுக்குந் தன்மை. பேணி - விரும்பி. எடுத்துக்காட்டு - உதாரணம். கலைவன்மை - கலைகளின் திறமை. சான்று - சாட்சி. பெற்றி - தன்மை. வஞ்சினம் - சபதம். இறை - கடவுள். சந்து - தூது (அ), சமாதானம். முரசு - அரச ஆணையைத் தெரிவிக்க முழங்கப்படும் பெரியதோர் தோற்கருவி. நிலவறை - நிலத்திற்கு அடியில் கட்டப்படும் அறை. (சுரங்கம்) வட்டாடுதல் - சூதாடுதல். கரத்தல் - மறைத்தல். நிலைஇய - நிலை பெற்ற.

வினாக்கள்

1. பண்டைத் தமிழரசரும், மகளிரும் எத்தகைய கலைத்திறன் பெற்று விளங்கினர்? சான்று தருக.
2. பண்டை வேந்தர் வீரத்தினைக் குறித்து நீவிர் அறிவது யாது?
3. சேரர் கொடையிற் சிறந்தவரென்பதை எதனால் அறியலாம்?
4. புலவர்கள் சிறந்தாரை உயர்த்திக் கூறும் நல்லியல்பினர் என்பதை விளக்குக.
5. 'அக்காலத்தில் தமிழ்ப் புலவரை மதியாதாருக்கு மதிப்பில்லை' —இக்கூற்றைச் சான்றுடன் விளக்குக.
6. நட்பின் சிறப்பை விளக்கும் பகுதியில் நீவிர் அறிவதென்ன?
7. 'அதுவே இக்கட்டுரையின் பயனாகும்'—இடஞ்சுட்டி விளக்குக.

பயிற்சி

1. 'இப்பாடத்தின் கருத்தை வள்ளுவர் கூறும் குறட் கருத்துச் களோடு ஒப்பிட்டு ஆராய்க.
2. 'கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாஞ் சிறப்பு' என்பதை உம் அறிவைக் கொண்டு நன்கு விளக்கி, உம் கிராமத் தோழனுக்கு ஒரு கடிதம் எழுதுக.
3. வஞ்சினம், சந்து, நிலவறை—இவை பற்றிக் குறிப்பு வரைக.
4. இப்பாடத்தில் எடுத்தாளப்பட்ட செய்யுட்களை உரைநடைப் படுத்துக.
5. தண்டமிழ்—தண்மை + தமிழ் - மையிறுதி கெட்டு, தண் + தமிழ் - என்றாயிற்று. "னலமுன் றனவும் ணளமுன் டணவும் ஆகும் தநக்கள் ஆயுங்காலே" என்னும் விதிப்படி தண் + தமிழ் - தண்டமிழ் எனப் புணர்ந்தது.

3. குடும்பக் கலை

[வித்துவான் து. கண்ணம்மாள் அவர்கள்]

ஒவ்வோர் ஆணும் பெண்ணும் தக்க வயது அடைந்தவுடன் குடும்பப் பொறுப்பு ஏற்று நடத்துவது இயல்பு. குடும்பம் நடத்துவது என்பது ஒரு கலை. ஓவியம், சிற்பம், நாட்டியம், இசை, கூத்து முதலியவை எங்ஙனம் கலைகள் எனக் கருதப்படுகின்றனவோ, அங்ஙனமே குடும்பம் நடத்திச் செல்வதும் ஒரு தனிக் கலையேயாகும்.

குடும்பத்தை வெற்றியுடன் நடத்திச் செல்பவர், வாழ்க்கையைக் கவலையற்று இன்பமாகக் கழிப்பர். குடும்பக் கவலையறியாமல் குடும்பத்தை நடத்துபவர், பல அல்லல்களுக்கு ஆளாகிச் 'சம்சாரம் சாகரம் துக்கம்' எனக் கூறிக் கொண்டு, 'இக்குடும்பத் தொல்லை என்று நீங்குமோ' என்று காலமெல்லாம் துன்புற்று வாழ்க்கையை வெறுத்து, என்றும் முணு முணுத்துக் கொண்டிருப்பர்.

"ஆன முதலில் அதிகம் செலவானல்
மானம் அழிந்து மதி கெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனய், ஏழ்பிறப்பும் தீயனய்
நல்லார்க்கும் பொல்லனும் நாடு"

என்று கூறப்பட்டிருக்கும் தமிழ்ச் செய்யுள், குடும்பத்தை நடத்தும் பொறுப்பு ஏற்றுக் கொள்பவனுக்கு முதற் பாடமாயிருக்கிறது. இஃதேபோன்று திருவள்ளுவப் பெரியார்,

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்று கூறியிருப்பதன் மூலம், மகளிர் தம் கணவருடைய வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்தல் வேண்டும் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார்.

'வருவாய்க்கு ஏற்ற செலவு' என்னும் முதற்பாடமே குடும்பக் கலையை வெற்றியடையச் செய்யும் பாடமாகும். இதனைக் கருத்திற் கொண்டே குடும்பத்தின் தேவைகளைக்

கவனித்தல் வேண்டும். மனித வாழ்க்கைக்குத் தேவைப் படும் பொருள்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று வாழ்க்கைக்கு இன்றியமையாமல் தேவைப்படுபவை. மற்றொன்று ஆடம்பரமானவை.

சத்து மிகுந்த எளிய உணவு, தூய எளிய உடை, சுகாதாரத்திற்கேற்ற தேவைக்குரிய அளவு வீடு, கல்வி, மருத்துவ வசதி முதலியவை முதலினத்தில் சேரத் தக்கவை.

ஆடம்பர உணவு, தேவைக்கு மேற்பட்ட அகன்ற இடமுடைய வீடு, பட்டாடைகள், பகட்டான உடைகள், அணிகலன்கள், விலை உயர்ந்த கலங்கள், பிற பொருள் கள், அடிக்கடி படக் காட்சி பார்த்தல், விருந்துகள் நடத்துதல், பிரயாணங்கள் செய்தல், வேலைக்காரர்களை வைத்துக் கொள்ளுதல் முதலியவை இரண்டாவது இனத்தில் சேரத் தக்கவை.

தேவைக்கு மேற்பட்ட பொருள்களை வாங்கிச் சேர்த் தல், தேவையற்ற செயல்களில் ஈடுபடுதல் முதலியவை நாகரிகத்தின் பெயரால் பல குடும்பங்களில் நடைபெறு கின்றன. இதனால் பொருட் செலவு மிகுந்து, இன்றியமை யாத செலவுக்குப் பொருள் முட்டேற்படுகின்றது; குடும்ப வாழ்வு தொல்லையாக மாறுகின்றது.

நம் நாட்டில் செல்வந்தர் மிகச் சிலரே. ஏழைகளே பெரும்பாலோர். இவர்கள் போதிய வருமானம் அற்றிருக் கையில், எது வாழ்வுக்குத் தேவை, எது தேவையில்லை என்பதைப் பகுத்தறிந்து வாழ்க்கை நடத்துவராயின் வாழ்க்கையில் உள்ள பல தொல்லைகள் அகன்று, வாழ்க் கைத் துன்பம் இன்பமாக மாறும்.

இறைச்சி, மீன், முட்டை, நெய், பால் முதலியவற்றை நிறைய உண்டு வந்தாலன்றி உடல் உரத்துடன் இருக்க முடியாதென்று சிலர் கருதுகின்றனர். இதன் பயனாக வருமானக் குறைவுள்ளோர் இவற்றை வாங்கி யுண்பதற் காகத் தங்கள் வருவாய்க்கு மீறிய செலவு செய்கின்றனர்.

பட்டாடைகள் போன்ற பகட்டான உடைகள் உடுத் திச் செல்வதுதான் மதிப்பிற்குரியது என்று கருதிச்

சிலர், அவற்றை வாங்குவதில் பெரும் பொருள் செல விட்டுக் கடன் படுகின்றனர்.

இவ்வண்ணமே, வீட்டை அமைத்தல், வீட்டுக்குரிய தட்டுமுட்டுப் பொருள்களை வாங்குதல் முதலியவற்றிலும் சிலர் பெரும் பொருளைச் செலவழித்துக் கடன்பட்டு அல்லலுறுகின்றனர்.

உடலை உரமுடையதாக வைத்திருக்கக் கூடியவன்மை காய் கறி, கீரை, பருப்பு முதலியவைகளுக்குமுண்டு என்பதை இவர்கள் உணர வேண்டும். எவ்வுடையாயி னும் தூய உடைக்கே மதிப்புண்டு என்பதையும், சிறு குடிலாயினும் துப்புரவாக இருத்தலே சிறந்தது என் பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். பணத்தைச் செட்டாகவும், செம்மையாகவும், பயனுடையதாகவும் செலவிட வேண்டும். இவ்வண்ணமொழுகின் வாழ்க்கை வளமுடையதாகும்.

எனவே, குடும்பப் பொறுப்பேற்குமுன் வருவாய்க்குத் தக்க செலவு செய்வது என்று முதலில் திட்டப்படுத்திக் கொள்ளவேண்டும். அவ்வண்ணம் செலவுத் திட்டம் வகுக்கையில், உணவுக்கு முதலிடமும், உடைகளுக்கும் உறைவிடத்திற்கும் இரண்டாவது இடமும் கொடுத்துச் செலவை வரையறுத்துக் கொள்ளுதல் வேண்டும். இதனை ஒழுங்காக முடிக்கக் குடும்பப் பொறுப்பேற்பவர் தத்தம் வீட்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தை ஆயத்தம் செய்து கொள்ளுதல் வேண்டும். பெரும்பாலான குடும்பத் தவர்களுக்கு மாத வருவாயே கிடைக்கிறபடியால், ஒரு மாதத்திற்குரிய வரவு செலவுத் திட்டத்தை வகுத்துக் கொள்வது நலம்.

இதனை எவ்வாறு வகுப்பது? மாத வருமானத்தையும், வீட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கையையும் கணக்கில் வைத்துக் கொள்ளவேண்டும். உண்ண உள்ளோர் தொகை அதிகமாயும் வருமானம் குறைவாயுமிருந்தால், முதலில் உணவுக்காக வருவாயில் பெரும் பங்கை ஒதுக்கி விடவேண்டும். உணவையும் கூடிய வரையில் காய்கறி உணவாக ஆக்கிக்கொள்ள வேண்டும். திரைப்படக்

காட்சி, பிரயாணம், விருந்து செய்தல் முதலியவற்றை அடியோடு நீக்குதல் வேண்டும். ஒரு சிறு பகுதியை உடைக்கென மிச்சம் பிடித்தல் வேண்டும். பிறகு வீட்டு வாடகை, கல்வி போன்றவற்றைக் கவனித்தல் வேண்டும். எஞ்சிய தேவைகளை வருமானம் உயர்கையில் பார்த்துக் கொள்ளலாம் என விடுத்தல் வேண்டும்.

ஒவ்வொரு நாளும் செலவிடும் பணத்தைத் தவருமல் குறித்து வைத்துக் கொள்ளவேண்டும். வீட்டில் அன்ருடம் நடைபெறும் செலவின் கணக்கு வைத்திராத குடும்பம் சீர்குலையுமாகையால், கணக்கு ஒவ்வொரு குடும்பத்திலும் இருத்தல் வேண்டும். நாள்தோறும் படுக்கைக்குப் போகு முன் அன்று ஏற்பட்ட செலவை எழுதிக் கையிருப்புத் தொகையை மீதி இருப்பாகக் காட்ட வேண்டும். மாத முடிவில் செலவு செய்த தொகைகளைக் கூட்டி, வருவாயுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், நம் செலவு வருவாய்க்குள் அடங்குகிறதா? கடன் வாங்கிச் செலவு செய்ய வேண்டிய தேவை என்ன ஏற்பட்டது? கடன் வாங்காமல் அதைச் சரிப்படுத்தியிருக்க முடியாதா? என்பன போன்ற யோசனைகளுக்கு இடமேற்பட்டு, அடுத்த மாதச் செலவுத் திட்டத்தைக் கருத்தோடு செய்ய இடமளிக்கும் "ஆற்றில் கொட்டினுலும் அளந்து கொட்டு" என்னும் பழமொழியை எண்ணிக் குடும்பக் கணக்கு வைக்கும் பழக்கத்தை ஒவ்வொருவரும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

குடும்பச் செலவு வருமானத்திற்கு மேல் போகாமலிருக்க வேண்டுமானுல், எப்பொருளையும் இன்றியமையாது தேவையானதுதானு? என்று கவனித்துக் கையிற் காசு கொடுத்து வாங்கும் வழக்கத்தை மேற்கொள்ளுதல் வேண்டும். இதனுல், அவ்வப்போது மாறுதலுக்குள்ளாகும் விலைகளின் விவரம் தெரிந்து, விலைகளுக்கேற்ப, சில பொருள்களைக் குறைத்தும் கூட்டியும் வாங்கிக் கொள்ளலாம். விலை மலிவாக உள்ள காலங்களில், பருப்பு வகைகள், புளி, விறகு, பயறு வகைகள், மிளகாய், மிளகு, கடுகு போன்ற பொருள்களை மிகுந்த அளவில் வாங்கி வைத்துக் கொள்ளலாம்.

கையிற் காசு கொடுத்து வாங்காமல் கடன் வாங்கும் வழக்கத்தை மேற்கொண்டால், 'நாளடைவில் குடும்பம், கடனுக்குள்ளாகி அல்லலுறும் என்பதில் ஐயமில்லை.

குடும்பப் பொறுப்பேற்போர் வீட்டினுள் வேண்டாத பொருள்களைப் போட்டு நிரப்பி இடத்தை அடைத்து விடுதல் கூடாது. அசுத்தங்களும், மூலைகளில் குப்பைக் கூளங்களும், உத்திரத்தில் ஒட்டடை, பூச்சி, புழுக்கள் முதலியவைகளும் சேராவண்ணம், அடிக்கடி கவனித்துத் துப்புரவாக வைத்துக் கொள்ளுதல் வேண்டும். ஈ, கரப்பான், வண்டு, எலி முதலியவை சேருவதற்கிடமில்லாமல் மூலைமுடுக்குகளில் சாமான் அடைப்பின்றி வைத்திருத்தல் வேண்டும். வீட்டுப் பாத்திரங்கள், துணிகள் முதலியவற்றை அன்றாடம் துப்புரவு செய்து அவற்றிற்குரிய இடங்களில் வைத்திருத்தல் வேண்டும். பிள்ளைகள் புழுதியிற் புரளாதவாறு கவனித்துக் கொள்ளல் வேண்டும்.

இங்ஙனம் சுகாதார விதிகளைக் கைக்கொண்டு நடந்தால், நோயின்றிக் குடும்பத்தைக் காப்பாற்றிவிடலாம். இதனால் மருந்துச் செலவு ஏற்படாமலிருக்கும்.

உணவு, உடை, உறைவிடம் முதலியவற்றில் துப்புரவாக இருக்குமாறு கவனித்து, இன்றியமையாது தேவைப்படுபவைகளை மட்டும் வாங்கி, வருவாய்க்கேற்பச் செலவிட்டு, வீட்டுக் கணக்கு வைத்து, செட்டாக நடத்தப்படும் குடும்பம் நாளடைவில் நன்னிலை எய்தல் இயலும். இவ்வாறு குடும்பத்தை நன்னிலையில் நடத்தும் வாழ்க்கையே இன்ப வாழ்க்கை யாகும்.

“இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல் வாருள் எல்லாந் தலை”

என்னும் திருவள்ளுவப் பெருமானாரின் திருவாக்கு இங்கு மனத்திற் பதிக்கத் தக்கதாகும்.

சொற்பொருள்

மதி - அறிவு. செட்டு - சிக்கன ஓவியம் - சித்திரம். சிற்பம் - கல், மரம் முதலியவற்றில் செதுக்கப்படு உருவம். அல்லல் - துன்பம். சாகரம் - கடல். அசுத்தம் - தூய்மையின்மை. வளம் - செல்வம்.

வாழ்க்கைத்துணை - மனைவி. உரம் - வலிமை. துப்புரவு - தூய்மை. குடில் - குடிசை வீடு. பகட்டு - ஆடம்பரம்.

வினாக்கள்

1. கலைகள் என்பன யாவை?
2. வருவாய்க்கு மேல் செலவிடுதலால் வரும் தீமைகளை வரைக.
3. வாழ்க்கையில் .கடன் உண்டாகாதிருக்க மனையாள் செய்யத் தக்கது யாது?
4. ஆடம்பர வாழ்வாவது யாது?
5. வீட்டு வரவு செலவுக் கணக்கைத் தினந்தோறும் ஏன் எழுத வேண்டும்?
6. குடும்ப வாழ்க்கை நடத்துபவர் கடன்காரராவதற்குக் காரணம் என்ன?
7. வீட்டை எவ்வாறு ஒழுங்காக வைத்துக்கொள்ள வேண்டும்?

பயிற்சி

1. குடும்பத்தின் வரவும் செலவும் என்பது பற்றி ஓர் கட்டுரை எழுதுக.
2. கடன் வாங்குதல் தகாதென்பதை விளக்கி உன் நண்பனுக்கு ஓர் கடிதம் எழுதுக.
3. ஆடம்பர வாழ்க்கை நடத்தியதால் வாழ்விழந்து சீர்குலைந்த ஒருவன் தானே தன் நிலையைக் கூறுவது போல் 20 வரிகள் எழுதுக.

4. பாரதியார் தமிழ்ப் புலமை

[நாவலர், திரு. எஸ். சோமசுந்தர பாரதியார், எம்.ஏ., பி.எல்.]

சமீபத்தில் காலஞ்சென்ற சி. சுப்பிரமணிய பாரதியார் தன்னிகரில்லாத் தமிழ்ப் புலவர். நமக்கு நெருங்கிய காலத்தவராகவே, அவர் கவிநலத்தின் உயர்வை உள்ளபடி அளந்தறிவது அருமையாகும். வெறுப்பவரும் நயப்பவரும் நடுநிலையின்றி இவர் இயல்புகளைக் கடையிறந்து காண்பாராவர். நம் கால நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு புதுமைக் கருத்துக்களால் இழுக்கப்பட்டு, நம்மிடையே பாடும் நம் காலப் புலவர் ஒருவரின் கவிகளை மிதமிஞ்சிப் புகழ்வாரும், வெறுத்து மிகப் பழிப்பவ்ரும் பலராவர்; ஆனல் இத்தகைய புலவரின் கவிகளை, கவி நலம் அறிவதன்றி வேறு நோக்கங் கொள்ளாது, தம் உணர்வைக் கவர விடாது படிப்பதும், படித்து அவற்றின் இயல்பை அளந்தறிவதும் மிகச் சிலர்க்கே யாவதாகும். நடுமை நல்லறிவாளர், பாரதியாரின் கவித்திறம் அறிந்து கூறும் நய உரைகள் காணும்வரை, மற்றவர் இப்புலவர் கவிதை நலங் காண முயல்வது தவறென்பது தகாதன்றே? ஆனவரை இத்தமிழ்ப்புலவர் கவிநலத்தை ஆராய்வோம். முதலில் தற்காலத் தமிழ்ப் புலவர் சங்கேதங்களுக்குப் பாரதியார் பெரும்பாலும் இணங்காதவர். நாகபந்தங்களும், ஏகத்தாள் இதழ் அகல் யமக அந்தாதிகளும், புலமைத் தலைக் கோலாக் கருதும் பாவலரிடையில், சித்திரகவி சத்துருவான பாரதியார் பாக்கள் மதிக்கப்படுவது அருமையே யாகும். மனேபாவ அருமையோடு பொருளும் வறண்ட தற்காலத்திலே, புலமை வனம் அழகொடு மணம் செயு மலர்களேனும், கொழுவிய தண்சுவைக் கனிகளேனும் தரமாட்டாது; அடர்ந்திருண்டு காழ்த்து மலிந்த இலைச் செடிகளாலும் புதர்களாலுமே நிறைந்து தோன்றுவது இயல்பாகும். தற்காலம் தழைகளே தழைவதாகவே, மணமற்ற தழைமாலைகளே பெரும்பாலும் தொடுக்கப் படுகின்றன. அழகு, மணம் முதலிய இயற்கை நலம்

இல்லாததாகவே, தழைகளை வினைத்திறம் மலியப் பல வாறு தொடுத்து, அடுக்காலும் தொடையாலும் பல்வேறு பட்ட இலைமாலைகளையே பலரும் முடைகின்றனர். இவ் வனத்திடையே தளரா ஊக்கம் உடையான் ஒரு புலவன், வெறுஞ் செடி களைந்து, நிலந்திருத்தி, உணர்வு நீர் வார்த்து, உரன் கதிர் ஊட்டி வளர்த்த நல்ல தமிழ்ப் பூந்தோட்டத்தில் நறுமலரும் சுவைக்கனியும் காணப் பெற்றால், அஃது அந்த வனத்தின் இயல்புக்குப் பொருத்த மற்ற அபூத விளைவாகவே தோன்றும். பாரதியார் பாக் கள் இப்படிப்பட்ட இலை வனத்திடை எழுந்த கனிமலர்த் தோப்பாம்.

இவர் பாக்கள் கருத்துக்களை வருத்தமின்றி விளக்கும் பண்டைப் பாவலர் பளிங்கு நடை பயின்று, இளகி ஒளிரும் வெண் பொன் ஒழுக்கும், இனிய ஓசையும், திட்பமும், சுவையும் உடையன. இப்புலவரது நூல் களைப் படிப்பவருக்கு நிகண்டு அகராதிகள் வேண்டா; கள்ளமற்ற உள்ளமும், ஊன்றிய கவனமும், தமிழில் ஆர்வமும் உடையாருக்கு இப்புலவர் இதயம் வெள் ளிடை மலையாம். எளிய இனிய இவர் கவிநடை நீரொழுக்கு உடையதேனும், வயிரத்தின் திண்மையும் ஒளியும் பெற்று நிற்கும்.

“ நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு ”

“ மாலைப் பொழுதிலொரு மேடைமிசையே
வானையும் கடலையும் நோக்கி யிருந்தேன்
மூலைக்கடலினை அவ்வான வளையம்
முத்தமிட்டே தழுவி முகிழ்த்தல் கண்டேன் ”

இனைய உருகு பொன் ஒழுக்குடைய ஒப்பற்ற இனிய அடிகளைப் படிக்குந்தோறும் நாவும், கேட்குந்தோறும் செவியும் இனிக்கும்.

அலங்காரங்களுக்கெல்லாம் தாயான உவமையைக் கையாளுவதில் இப்புலவர் பண்டைப் பாவலர் பலர்க்கும்

இளையாதவர்; இக்காலத்தில் இணையற்றவர். வருந்தித் தேடிப் பொருந்தச் செய்யும் புலவர் பெரு முயற்சியை நன்றி மறவாது சுமந்து காட்டும் பல புலவர் அணிகளைப் போலன்றி, பாரதியாரின் உவமைகள் இயற்கையினின்று இவர் வாக்கைத் தேடி வந்தடையும். இவர் உவமை அனைத்தும் கருத்துக்குப் பொருத்தம் உடைமையோடு, கேட்போர் மனத்தில் பதிந்து மறையாது உறையும் செவ்வி உடையவாம். இயற்கையினின்று எளிதிலெடுத்துத் தன் கவிதை அமுதருத்தி இவராளும் உவமைகள், இப்புலவர் கற்பனைத்திறனையும், ஒப்புணர் தேர்ச்சியையும், கவிவனை கைவினை முதிர்ச்சியையும், அநாயாச ஆட்சியையும் இனிது காட்டும். பழம் பாட்டுக்களைத் துருவி, பண்டை உவமைகளை உருவி, தம் புலமை நிறுவக் கருவியாக்கும் இழிசெயலை அறவே வெறுத்தவர் இப்புலவர்.

“தேனை மறந்திருக்கும் வண்டும்—ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்,
வானை மறந்திருக்கும் பயிரும்—இந்த
வையம் முழுதுமில்லை தோழீ.”
“கண்ணன் முகம் மறந்து போனால்—இந்தக்
கண்கள் இருந்து பயன் உண்டோ?”

என வரும் பல உவமைகளையுங் காண்க. உவமான உவமேய இயைபுகளும், அவைகளின் அழகும், கவிகளில் இவற்றின் அமைப்பும் விசதமாக எடுத்து விரிப்பதானால், இவற்றிற்கே பல கட்டுரைகள் வேண்டும். கேவலம் பண்புகளையும், மனோபாவ எண்ணங்களையுமே உருவகப்படுத்தி, அவற்றின் உதவிகொண்டு தம் கோள் நிறுவுதலில் இவர் கைவந்த சமர்த்தர்.

இவரைக் குற்றமற்ற மதுரகவி என்னலாம். இவர் சித்திரகவிக்கு மித்திரர் அல்லர். பண்டை முறைப்படி விஸ்தாரப்படுத்தி யாதொரு நூலுஞ் செய்ய இவர் விரும்பினதாய்த் தெரியவில்லை. வெளிவந்த ‘பாஞ்சாலி சபதம்’ ஒத்த சில சிறு காவியங்களையும், அச்சேறுத ‘சேற்றூர் உலா’ அன்ன சில ஒரு துறைக் காதல்

பனுவல்களையும், இவர் செய்ததுண்டு. இவர் இயற்றிய ஒரு பொருள் நுதலிய பலதுறைக் கோவைகளில் 'கண்ணன் பாட்டும்', 'சுதேச கீதங்களுமே' தலைநின்ற சிறப்புடையனவாம். கவி தொறுங் கனியும் தேனும், அறிதொறுங் கமழுங் கண்டும் தெவிட்டாத சுவை தருவதாம்.

பண்டுதொட்டுப் பாவலர் நால்வகைப்பாவிலும் இயற்றியுள்ள பனுவல்கள் ஆயிரக்கணக்கானவை. திருத்தக்க தேவரும் கம்பரும் விருத்தப்பாவை வீறு பெறச் செய்ததுமுதல், பிந்திய புலவரெல்லாம் பாக்களின் பண்பையும் பயனையும் அறவே மறந்து, விருத்தப்பா இனத்திற்கே அரசுரிமை தந்துவைத்தார். விருத்தமல்லாப் பலதுறைப் பாவினங் கொண்டெழுந்து, விழுமிய தனிப் பனுவலாகப் புலவர் போற்றுவது, தற்கால உலகில் கலிங்கத்துப்பரணி ஒன்றே. இந்நிலையில் தமிழகத்தெழுந்த நம் புலவர், தனிப் பாசுரங்களால் தலைநின்ற தம் கவித்திறத்தை எவ்வகைப் பாவினுங் காட்டவல்லாராயினும், தாம் தொகுத்த பனுவல்கள் பலவும் இசையோடு பாடத் தகும் பாவினப் பாட்டுக்களைக் கொண்டே செய்து அமைத்துவைத்தார். நமது கவியின் புதுக் கருத்துகளுக்கும், நாடு மொழி மதங்களோடு குறுகாமல் மக்கள் நலத்தோடு விரிந்த விசால நோக்கத்துக்கும், உலகு முழுதும் பரந்து வந்து நமது நாட்டையும் இயக்கும் புதுக் கிளர்ச்சிக்கும் மிக்க பொருத்தம் உடையதாக, தம் கவி உள்ளம் கனிந்துருகி அலைத்தெழும் உணர்வு வெள்ளத்தை வழிப்படுத்தித் தமிழ்ப் பெருமக்களை ஊக்கி அவர்க்கு ஆக்கம் தருவதற்கு இசை இனிக்கப் பாடுவதே கடன் என்றறிந்த புலவர், அக்கருத்து மேற்கொண்டு இப் புதுவழி புகுந்து, தமிழருக்குப் புதிய உணர்ச்சியும் தமிழுக்குப் புத்தணிகளும் தேடித் தந்துளார்.

எதுகை மோனைகளைத் தேடிப் பொருளிழந்து திண்டாடும் பாக்களால் புண்பட்ட தமிழ்மகள், தொட்டதெல்லாம் பொன்னுக்கும் இவர் பாவன்மை வேதுபெற்று, ஆறுதலும் மகிழ்வும் அடைவாள். பாப்பாப் பாட்டு,

முரசு கவிகளால் மிழன்று, பள்ளும் கிளிப்பாட்டும் பயின்று, விடுதலை தாய்நாடு பாடி, பாஞ்சாலி சபதம் கூறி, கண்ணன் பாட்டு ஜீவன் முக்திகளில் வீறிய இவர் கவிதைநலம், பண்ணேறி விண்ணுயர்ந்து உலவுவ தாகும். சமயம், ஆசாரம், சமுதாய ஒழுக்கம் ஆகிய வற்றுள் சமதிருஷ்டியும், சர்வாபி அனுதாப நிறைவும் இவர் பாத்தொறும் பரவி விரவும். எனைத்தானும் தற் காலத் தமிழுலகில் இவரொத்தாரைக் காண்பதரிது; மிக்கார் இலராவர்.

சொற்பொருள்

காலத்தவ ராகவே - காலத்தவராதலால். நயப்பவர் - விரும்புவோர். கடையிறந்து - அளவுகடந்து. ஆதர்சம் - லட்சியம் (குறிக்கோள்). சங்கேதம் - மனக்குறிப்பு. இதழ் அகல்யமக அந்தாதி - உதடுகள் சேராமல் பாடத்தக்க யமகத் தொடையில் அமைந்த அந்தாதி. அபூத விளைவு - முன் நிகழாத விளைவு. மாலவன் குன்றம் - வேங்கடம். இனைய - இவைபோன்ற. செவ்வி - காலம். காழ்த்து - உரம்பெற்று. கைவினை முதிர்ச்சி - தொழில் திறன் நிறைவு. அநாயாச ஆட்சி - எளிதாக எடுத்தாளுதல். துருவி - தேடி. விசதமாக - தெளிவாக. கண்டு - கற்கண்டு. பனுவல் - நூல்.

வினாக்கள்

1. 'பாரதியார் பாடல்களை நடுநின்று சீர்தூக்கல் சிலர்க்கே யமையும்'—ஏன்?

2. பாரதியார் பாக்கள் மதிக்கப் பெருமைக்குரிய காரணங்கள் யாவை?

3. அபூத விளைவாகத் தோன்றுவது எது?

4. பாரதியாரின் பாக்கள் எத்தன்மைகளை உடையன? சான்றுடன் விளக்குக.

5. பாரதியாரின் உவமைகள் மிகச் சிறந்தன என்பதைச் சான்று தந்து நிறுவுக.

6. பாரதியார் இயற்றிய நூல்கள் சிலவற்றைக் கூறு.

பயிற்சி

1. இப்பாடத்தில் வந்துள்ள பாரதியார் பாக்களை எடுத்தெழுதி அவற்றின் சிறப்புக்களையும் புலப்படுத்துக.

2. 'பாரதியார் புலமை' என்பதுபற்றி ஓர் கட்டுரை வரைக.

3. வெள்ளிடைமலை, ஏகத்தாள் இதழ் அகல்யமகவந்தாதி. ஒரு பொருள் முதலிய பலதுறைக் கோவை—இவற்றை விளக்குக.

4. சேர்த்து எழுதுக :—கவி + திறன், பொன் + ஒழுக்கு, பெருமை + முயற்சி, அச்சு + ஏருத, புதுமை + அணி, விண் + உயர்ந்து, பண்டு + பாவலர், விருத்தம் + பா.

5. வாக்கியங்களில் அமைக்க :—நயப்பவர், நடுமை நல்லறிவாளர், இலைமாலை, பளிங்குநடை பயிலல், கவிதை அமுது, ஒப்புணர் தேர்ச்சி, கைவினை முதிர்ச்சி, வீறுபெறுதல்.

6. முதலில் தற்காலத் தமிழ்ப் புலவர்.........என்று தொடங்கும் பகுதியை உன் சொந்த நடையில் விளக்கி எழுதுக.

5. கல்வி

[கருமுத்து—தியாகராசச் செட்டியார்]

கல்வி மக்கட்குக் கண் போன்றது. இம்மை மறுமை இரண்டிற்கும் பயனளிப்பது. இதனை முறையாகவும், நெறி வழுவாமலும் தொகுத்து வகுத்துப் பரப்புவதே அரசின் முதற்கடமை யாகும்.

ஒரு நாடு அறிவாற்றலாலும், நாகரிகத்தாலும், செல்வத்தாலும், வளத்தாலும், புகழாலும் சிறந்தோங்கி விளங்குதற்குக் கல்வியே ஒப்பற்ற கருவியாகும். ஆதலால் அறியாமை, அநாகரிகம், வறுமை, வறட்சி முதலிய வற்றால் சீர்குலைந்து கிடக்கும் நாட்டைச் செம்மைப் படுத்துவதற்கு அக்கல்வியே சிறந்த கருவியென்பது துணிந்த முடிபாகும்.

நாடோ பெரியது. ஆனால் வறியது. இது பெற்ற முப்பத்து முக்கோடி மக்களை எவ்வாறு படிப்பிப்பது? இதற்கு வேண்டும் பொருள் எங்கே? பயிலும் இடம் எங்கே? நல்லாசிரியர்கள் எங்கே? அதற்குச் சிறந்த பரிகாரம் பண்டைக்காலத்தில் நம் நாட்டில் திகழ்ந்து வளர்ந்த திண்ணைப் பள்ளிக்கூடங்களை மீண்டும் உயிர்ப்பித்தலேயாம். திண்ணைப் பள்ளிக்கூடங்கட்குப் பொருளோ, இடமோ, ஆசிரியர்களோ மிகுதியாக வேண்டுவதில்லை.

இனி, பலகோடி மக்களை முறையாகப் படிப்பிப்பதற்கு நாடெங்கும் கலைக்கூடங்களைப் பரப்ப முயலவேண்டும். இக்கருத்தையே,

> ‘ வீடுதோறும் கலையின் விளக்கம்
> வீதி தோறும் இரண்டொருபள்ளி
> நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
> நகர்களெங்கும் பல பல பள்ளி ’

என்று பாரதியார் பறைசாற்றி யிருக்கின்றார்.

ஆகவே, ஊர்தோறும், சிற்றூர்கள்தோறும் பள்ளிகள் ஏற்படுத்தவேண்டும். சிறுவர்கள் மட்டுமன்றி முதியவர்

களும் படிக்க நூல்நிலையம், வாசகசாலைகள் வேண்டும். உலக நிகழ்ச்சிகளை அறிந்துகொள்ளவும், அரசியல் செய்திகளைத் தெரிந்து கொள்ளவும் அரசியல் உணர்ச்சி பெறவும் ஆங்காங்கே வானொலிக் கருவிகள் வேண்டும்.

கல்வி கேள்விகளை யுடையார்க்கும் அவையில்லார்க்கும் உயர்ந்த நீதிகளைப் புகட்டக்கூடிய வரலாறுகளையும், கதைகளையும் திரைப்பட மூலம் காட்சியளவிற் காட்டிப் பயன்படுத்த வேண்டும்.

இவையெல்லாம் சிற்றூர் பஞ்சாயத்து மூலமாக அன்றிச் செவ்வனே நடைபெறச் செய்தல் அரிதாகும்.

இனி, ஒருமுகப்பட்டு ஓரிடத்தில் அமைந்து தங்கி நிற்கும் கலை, சட்டம், மருத்துவம், பொறியியல், சிற்பம் முதலியவற்றைக் கற்பிக்கும் கல்லூரிகளையும், அவற்றை ஆளும் பல்கலைக் கழகங்களையும், பல இடங்களிலும் நிறுவுதல் வேண்டும். இதுவே கல்வியை எங்கும் பரப்புவதற்கு ஏற்ற வழியாகும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆண்களுக்கும், பெண்கட்கும் தனித்தனியே கலாசாலைகள் ஏற்படுத்தவேண்டும். நெருங்கிய தொடர்புடைய சிற்சில மாவட்டங்களுக்கு நடுநாயகமாக விளங்கும் நகர்களில் பல்கலைக் கழகங்களைத் ஸ்தாபிக்கவேண்டும். ஆராய்ச்சிகள் செய்ய பல்கலைக் கழகங்களே ஏற்ற இடமாகும். ஆராய்ச்சியினுலேயே புதைந்து மறைந்துகிடக்கும் அரும்பெரும் பொருள்களைக் காணவும் பௌதிக, இயற்கை உண்மைகளை அறியவும், அறிந்தவற்றைப் பயன்படுத்தவும் கூடும் என்பது தெளிவாம்.

விரிந்து பரந்த நம் நாட்டில் மறைந்து கிடக்கும் செல்வம் அளவிடப்படுமோ? பூமிக்குள் புதைந்து கிடக்கும் உலோகங்களை மதிக்கவும் கூடுமோ? ஓங்கி வளர்ந்து தடர்ந்த பெருஞ் சோலைகளின் வளப்பத்தைச் சொல்லவும் முடியுமோ? வானளாவிய மலைகளின் அழகிய காட்சி தான் என்னே! அணைக்கு அடங்கா ஆறுகள்தான் எத்தனை! இவ்வளவு நீர்வளம் நிலவளம் நிறைந்த நாடு இப்பூமியில் வேறொன்று உண்டோ? இப்படி இயற்கையில்

பெருஞ்செல்வம் படைத்த நாடு வறுமையில் மூழ்கிக் கிடப்பதற்குக் காரணம் யாது? ஏற்ற கல்வியும் நுண்ணிய ஆராய்ச்சியும் இல்லாத குறையே என்று துணிந்து கூறலாம். இயற்கை வளமில்லாத மேல்நாடுகள், செல்வத்தில் தழைத்து ஓங்குவதற்குக் காரணம் அந்நாட்டுப் பெருங் கல்வியும், அரிய ஆராய்ச்சியும் ஆகிய இவற்றின் பயனே அன்றோ!

ஐந்துகோடி மக்கள் உள்ள இங்கிலாந்தில் பதினைந்து பல்கலைக் கழகங்கள் இருக்க, அதே எண்ணிக்கையுள்ள சென்னை மாகாணத்தில் மூன்றே பல்கலைக் கழகங்கள் இருக்கின்றனவென்பது வருந்தத்தக்கதன்றோ!

எங்கும் பள்ளிகள், கல்லூரிகள், சர்வகலாசாலைகள் தழைத்துச் செழித்திருந்தால் நாடு எத்தனை சிற்பிகளை, விஞ்ஞானிகளை, மருத்துவர்களை, ஆசிரியர்களைப் பெற்றுப் பெருமையடைந்திருக்கும்! விஞ்ஞானிகள் எத்தனை பேர்கள் தோன்றி செவ்வாய் மண்டலத்திற்கும், மண்ணுலகத்திற்கும் வழிவகுத்துக் கொடுத்திருப்பார்கள்! நம் நாடே உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் மிகச் செல்வமுள்ள நாடாக இருந்திருக்குமே!

இனி தற்காலக் கல்வி முறை எவ்வாறு குறைபாடுள்ளது, அதை எவ்வாறு திருத்தியமைப்பது என்பனவற்றைச் சற்று ஆராய்வோம்.

அயல் நாட்டு ஆட்சியில், வேற்று மொழியால் சிதைந்து கிடக்கும் நம் நாட்டு மொழி, கலை, பண்பு இவற்றை மீண்டும் உயிர்ப்பித்தல் நம் முதற்கடமையாகும்.

பள்ளி ஒரு சிறு உலகம். அதிலிருந்தே நல்ல மக்கள் உருவாகவேண்டும். அம்மக்கள் தீய வழக்க ஒழுக்கங்களுக்கு ஆளானால் அவர்கள் அதினின்றும் மீள்வது அரிதாகும். வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதே கல்வியின் நோக்கமாகக் கொள்ள வேண்டும். நல்ல பழக்கம், உயர்ந்த கொள்கை, ஒழுங்கு முறைமை, வரையறைப்பட்ட வாழ்க்கை, நுட்பமான பயிற்சி, நல்ல உணவு, தூய ஆடை, உடற்பயிற்சி, சுகாதாரம், காற்று, உழைப்பு, சிக்

கனம் முதலியவற்றைப் பற்றிக் கற்பித்து, ஒழுக்கத்தை உருப்படுத்த வேண்டும்.

ஒழுக்கமாகிய சிறந்த நோக்கித்திற்குக் கல்வி கருவி என்பதை உணர்ந்து, கல்வி வளரும்பொழுதே ஒழுக்க வளர்ச்சிக்கும், மாணுக்கர்களின், மன, மொழி, மெய்களை உரியனவாக்குதல் வேண்டும். இதை அடைய ஆசிரியர் மாணுக்கர்களின் அறிவை வளர்த்து, அரிய கருத்துக் களைத் தொகுத்து வைத்து மக்கட் பண்பைப் பெருக்கல் வேண்டும்.

இவ்வாறு உயர்ந்த நோக்கத்தைப் பயிற்றி மாண வர்களை நன்மக்களாக்குதற்குத் திறமையும் சீலமும் வாய்ந்த ஆசிரியர்கள் வேண்டும். அவர்கட்கு நல்ல ஊதியம் கொடுக்க வேண்டும். மற்றைக் கருவி முதலிய சாதனங்களெல்லாம் இரண்டாந்தரமாகக் கொள்ளத் தக்கனவாகும்.

இனி, இலக்கியத்தைப் படித்தல், படிக்கும் முறை, பொருளாராய்தல், சுவையுணர்ந்து, இன்புறுதல் இவை போன்ற சிறந்த முறைகளைக் கையாளுதல் வேண்டும். இன்னும் காவியம், ஓவியம், இசை, மருத்துவம், சிற்பம், நிதி, நிர்வாகம், வரவு, செலவு, சமூக வாழ்க்கை அரசியல் அமைப்பு முதலிய நூல்களை ஒரு சில இடத் தன்றி, பல இடங்களிலும் பயிலுதற்கு வழி செய்ய வேண்டும்.

கல்வியைத் தாய்மொழி மூலமாகவே முதலில் கற்பிக்க வேண்டும். தாய்மொழி நன்கு கற்ற பிறகே பிறமொழி கள் படிப்பிக்க வேண்டும்.

'பால்வாய்ப் பசுந்தமிழ்' என்று ஆன்றோர் கூறிய வாறு கருவில் பதிந்து, பிறப்பொடு கூடி, பால் உண்டு மழலை மொழியும் பொழுதே உடன் தோன்றி வளர்வது தாய்மொழியே யன்றோ! பிறமொழி சிறுவருக்கு இயல்பில் அமையாமல் தாங்கரிய சுமையாகும்.

ஆகவே, தொடக்கத்தில் பிறமொழியைச் சுமத்தாமல், தத்தம் தாய்மொழியில் பயிற்றுவதே பொருந்தும். மேலும் சிறு பிள்ளைகளைப் பலமொழி கற்கச் செய்வது

இடர்ப்பாட்டை விளைவிக்கும். சுவீடனில் ஐந்தாவது வகுப்பு வரை பிறமொழி கற்பிப்பதில்லை. பின்னரும் மும்மூன்று ஆண்டுகட்கு ஒவ்வொன்ருக ஒரு பிற மொழி தான் கற்பிக்கப்படும்.

இனி, தொடக்க முதல் தொழிற் பயிற்சியொடு நூற் கல்வியைப் போதிக்கும் புதிய அடிப்படைக் கல்வி முறை அறிவு வளர்ச்சிக்கு அத்துணைத் தகுதி யுடையதா? என்பதும் கருதற்குரியது. தொழிற் கல்வி வேண்டுவதே. ஆனால் கல்வி யறிவு இல்லாத தொழிலாளர் வாழ்க்கை வளங்குன்றும்; வனப்பு மிராது. ஓரளவு கல்வியறிவு பெறுவது, தொழில் பயிலத் துவங்குவதற்கு அடிப்படையும் துணையுமாகும்.

நடுத்தரக் கல்வி முடிந்தபின், தொழிற் கல்வியைத் தனியே பயிற்றுவது நல்ல முறையாகும். நடுத்தரக் கல்வி கூட இல்லாத தொழிலாளர் வாழ்க்கை சிறவாது. மிகச் சிறந்த விஞ்ஞானம் முதலிய கலையறிவைப் பெற்றுப் பயன்படுத்த விரும்புவோர்க்கு, தொடக்கத்திலேயே நூற்றல், நெய்தல், தச்சு, கொல்லு வேலை போன்ற தொழிற் கல்வியைக் கட்டயமாய்ச் சுமத்துவது பயனற்றது மன்றி மேலான கல்வி வளர்ச்சிக்குத் தடையாகவும் இருக்கும். எவ்வாற்ருலும் தொழிலொடு தொடங்கும் புதிய அடிப்படைக் கல்வி முறை நல்லதன்று. பண்டைக் காலத்தில் இம்முறை அறவேயில்லை.

இவ்வுண்மையைத் தமிழ்ப் பெருங்காப்பியங்களுள் ஒன்ருகிய சீவகசிந்தாமணியில் சீவகன் கல்வி கற்ற முறையைக் கூறுங்கால்,

‘ நாமகள் நலத்தை யெல்லாம் நயத்துடன் பருகி நன்னூல்
ஏமுதலாய எல்லாப் படைக்கலத் தொழிலும் முற்றிக்
காமனுங் கனியவைத்த புலங்கரைக்கண்டு கண்ணுர்
பூமகள் பொலிந்த மார்பன் புவிமிசைத் திலகமொத்தான் ’

என்று அந்நூலாசிரியர் விளக்கியிருத்தலாலும் உணரலாம்.

இச்செய்யுளில் ‘ நாமகள் நலத்தை யெல்லாம் ’ என்பதனுல் தொடக்கக் கல்வியையும் ‘ நன்னூல் ’ என்றதனுல்

உயர்ந்த இலக்கிய இலக்கணங்களையும், 'ஏமுதலாய படைக்கலத் தொழில்' என்றதனுல் அரசர் மரபுக்குரிய போர்த் தொழிலையும் 'எல்லாத் தொழிலும்' என்றதனுல் அதற்கு இனமாகிய மற்றைத் தொழில்களையும், 'காமனுங் கனிய வைத்த புலம்' என்றதனுல் இனிய இசைக் கலையை யும் முறையே பயின்ருன் என்பது விளக்கப்பட்டவா ருகும்.

இத்துணையும், உலகியற் கலைகளை சீவகன் கற்றமை கூறி, முடிவில் இவ்வுலகியலைக் கடந்து, வீடுபேறு எய்தற் குரிய ஞான நூல்களையும் கற்ருன் என்பதை 'நல்லறத் திறைவணுகி நால்வகைக் கரணமெய்தி' என்னும் செய்யு ளால் ஆசிரியர் விளக்கியுள்ளார். பண்டைக் கல்வி முறை எத்துணைச் சிறப்புடையதாக விளங்கியதென்பது இத ஞல் அறிந்து தெளிந்து கொள்ளலாம்.

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்ற வாறு பள்ளிப்படிப்பு அறிவை வளர்க்கும் நோக்கம் கொண்டதாகவே யிருத்தல் வேண்டும். இயற்கைப் பொருள்கள், இசை, காவியங்கள், இவற்றின் அழகை அறிந்து உணர்ந்து பாராட்டிப் படித்தல் வேண்டும். அப்பொழுதுதான் இறைவனிடத்தில் பக்தியும், மக்க ளிடத்தில் அன்பும் ஏற்படும். உழவு, தோட்டம் உண் டாக்குதல், எவருக்கும் இன்றியமையாதனவாகலின் இவற்றைக் கல்வி பயிலும் காலத்தும் மேற்கொள்ளலாம்.

சொற்பொருள்

கரு - வித்து. வனப்பு - அழகு. பருகுதல் - உண்டல். சீர் - சிறப்பு. பரிகரித்தல் - நீக்குதல். ஸ்தாபித்தல் - நிறுவுதல். சுகாதாரம் - நல்வழி. ஏ - அம்பு. காமன் - மதன். கரணம் நான்கு - சரியை, கிரியை, யோகம், ஞானம். எண் - கணக்கு. எழுத்து - இலக்கண இலக்கியங்கள். சீலம் - ஒழுக்கம்.

வினக்கள்

1. அரசின் முதற் கடமை யென்ன?
2. நாட்டின் சிறப்பிற்கு முதல் காரணமாவது எது?
3. கல்விபற்றி பாரதியார் கூறியதென்ன?

4. மேல்நாடுகள் செல்வ நிலையிலிருப்பதற்குக் காரணமென்ன ?
5. நம் நாடு வறுமை நிலையில் மூழ்கிக்கிடக்கக் காரணமென்ன ?
6. கல்வியின் நோக்கமென்ன ?
7. இலக்கியத்தை எவ்வாறு படித்தல் வேண்டும் ?
8. பல மொழி கற்பிப்பதால் வரும் கேடென்ன ?
9. சிந்தாமணி ஆசிரியர் சீவகன் கல்விபற்றிக் கூறியதென்ன ?
10. பண்டைக்கால கல்விமுறை பற்றி எழுது.

பயிற்சி

1. பண்டைக்கால கல்வி முறை பற்றி 20 வரிகளில் ஒரு கட்டுரை எழுது.
2. கல்வியின் சிறப்பைப் பற்றி 10 வரிகள் எழுது.
3. நம் நாட்டின் கல்விநிலைபற்றி ஒரு கடிதம் உன் நண்பனுக்கு எழுது.
4. சிறு குறிப்பு வரைக: சிந்தாமணி, சுவீடன்.
5. விளக்குக: பால்வாய்ப் பசுந்தமிழ், நால் வகைக் கரணம்.

6. குறள் தரும் பொருள்

[புலவர் த. முருகேசன்]

உயர்தனிச் செம்மொழியெனப்படும் நம் தமிழ் மொழியை உலக மக்கள் அறிந்து போற்றும்படிச் செய்த பெருமை திருவள்ளுவரையே சாரும். அவர் இயற்றிய **திருக்குறள்** எந்நாட்டவர்க்கும், எக்குலத்தவர்க்கும், எவ் வினத்தவர்க்கும், எம்மதத்தவர்க்கும் ஏற்புடைத்தாய் வாழ்க்கைப் பயனை உணர்த்துவதோடு, அரசியல் நுட்பங் களை உணர்த்துவதுமாய் அமைந்துள்ளது. ஆதலின் இன-இட-மொழி வேறுபாடு கருதாது பல நாட்டவரும் தம் மொழியில் திருக்குறளை மொழி பெயர்த்துக்கொண் டனர். **நாடு, அரண், அமைச்சு, அரசு, தூது, ஒற்று** ஆகியவை எவ்வாறு இருத்தல் வேண்டுமென்பதை விளக்கிக் கூறுவதிலிருந்து அவருடைய அரசியல் நுட்பம் புலனாகும். அத்தகைய நுட்பம் அரசியலில் (உட்படு கருமத் தலைவர் என்னும்) தக்க பதவியிலிருந்ததால் ஏற்பட்ட தென்பர். வள்ளுவரின் முதிர்ந்த அரசியல் நுட்பம் முழுமையும் பொருட் பாலில் மிளிர்கின்றது.

உலகில் மக்கள் பெறவேண்டிய பயன்கள் **அறம், பொருள், இன்பம், வீடு** என்பனவாம். இந்நான்கினுள் வீடு என்பது சிந்தையும், மொழியும் செல்லா நிலைமைத்து அன்றியும் முன் மூன்றனால் அடைவதே வீடு. அம் மூன் றனையும் உணர்த்தும் நூலே முப்பாலாகிய திருக்குறள். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள் "**நடுவணது எய்த இருதலையும் எய்தும்**" என்ற மொழிப்படி பொருள் இருந்தால் அறம், இன்பம் ஆகிய இரண்டையும் பெறுதல் எளிது. 'தீதின்றி வந்த பொருள் அறனீனும், இன்பமும் ஈனும்' 'ஒண்பொருள் மிகுதியுமுடையோர்க்கு ஏனையிரண்டும் எண்பொருளாகும்' என்னும் வள்ளுவர் வாய்மொழி இதனை வலியுறுத்தும்.

பொருளானது அறம், இன்பம் ஆகிய இரண்டினை யும் அளிப்பதோடன்றி, மனிதனை மனிதனாக்குகிறது; பகைவனை முறியடிப்பதற்குரிய கூரிய எஃகாகின்றது;

ஒரு பொருளாக மதிக்கத் தகாதவனையும் பொருளாக மதிக்க வைக்கிறது; இதனை வள்ளுவர்

" பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள் "

என்று சொல் நயமும், பொருள் நயமும் தோன்றக் கூறி யுள்ளார். அன்றியும் தன்னையுடையவனை யாவரும் புக ழும்படிச் செய்கிறது என்றும் கூறியுள்ளார்.

" ஈட்டி எட்டிய வரையில் பாயும்
பணம் பாதலம் வரையில் பாயும் "

என்ற பழமொழியும்

'பணம் பந்தியிலே குலம் குப்பையிலே' என்ற பழமொழியும் பொருளின் சிறப்பையும், பயனையும் உணர்த்துகின்றன.

பொருளின் சிறப்பையும் பயனையும் மட்டில் உணர்ந் தால் போதுமா? அதனை நாம் நேரிய நெறியில் அடை யும் வழியையும் உணர வேண்டும். நல்வழியில் ஈட்டிய பொருளே நன்மையைத் தரும். தீநெறியில் ஈட்டிய பொருள் நற்பயனை அளிக்காததோடு, ஈட்டியவனையே அழித்துவிடும்.

" அல்லற் பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை "

பிறரை வருத்திக் கண்ணீர் விடும்படிச் செய்து அவர்களிட மிருந்து ஈட்டிய பொருளை அழிக்கும் படை, அவர்களது கண்ணீர்த் துளியேயாம் என்கிறார் வள்ளுவர். வஞ்சனை யினால் பொருள் சேமிக்க விரும்புபவர், பசுமண் கலத்தில் ஊற்றப்பட்ட நீர் வெளியாவதுடன் பானையும் அழிவது போன்று, பொருளை இழந்து தாமும் அழிவர் என்றும், திருட்டினால் வந்த பொருள் வளர்வதுபோல் தோன்றி, முன்னுள்ள பொருளையும் அழித்துவிடும் என்றும், சூதினால் வந்த பொருள் மீன் தூண்டிற் புழுவை இரை யென்று கருதி விழுங்கி அழிவது போன்று ஈட்டியவனை யும், அவன் பொருளையும் அழித்துவிடுமென்றும், நல்ல உவமைகளின் மூலம் தெள்ளத் தெளிய அழகுற விளக்கி யுள்ளார். இதுகாறும் கூறிய வாற்றான் அறநெறியால்

ஈட்டியே பொருளே அறம், இன்பம், நற்பேறு ஆகிய வற்றை நல்கும் என்பது புலனாகின்றது.

அலைபோன்றழிவது செல்வம்; நீர்க்குமிழி போன்றது இளமை; நீரில் எழுதும் எழுத்தினைப் போன்றது யாக்கை; சகடக் காலைப் போன்றது செல்வம்; என்று துறவுடையார் கூறும் கூற்றினை முழுதும் நம்பி, பொருளினைக் கண்ட கண்ட வீணர்கட்குக் கொடுத்துப் பழியையும், இழிவையும் அடைகின்றனர் சிலர். திரு. வி. க. அவர்கள் நிலையாமை எண்ணம் நம் நாட்டினை என்புருக்கி நோய் போன்று அரித்து வருகின்றது என்று கூறுகிறார்.

"காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா"

"வருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோ இந்த மலக்குரம்பை"

என்ற தொடர்கள், உடலழிந்துவிடும் என்பதற்காகமட்டும் உரைக்கப்படவில்லை. அழியும் உடம்பையும் பொருளையும் கொண்டு அழியாப் புகழைத் தேடிக்கொள். 'நன்மையே செய்; தீமை செய்யாதே' என்பவற்றையும் உட்பொருளாகக் கொண்டு மிளிர்கின்றன. 'சோம்பியிரு'; 'ஏய்ப்பவர்க் கிடங்கொடுத்து ஏழ்மையாயிரு'; 'உடலைப் பேணாதே' என்பதற்காகக் கூறப்படுவதன்று. பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்ற நாம் உடலைப் பேணாவிடில் உடல் அழிந்துவிடும். உடல் அழிந்தால் உயிர் நீங்கும். இதனையே திருமூலர்.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்"

எனப் பகர்ந்துள்ளார். அதனை உணர்ந்து உடம்பைப் பேணி, பொருளை ஈட்டி உயிர்க்கு ஊதியமாகிய புகழைப் பெறுக!

இத்தகைச் சிறப்பு வாய்ந்த பொருளின்றேல் இவ்வுலக வாழ்வே இல்லை. அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லாதது போல, பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை என்று கூறுகிறார். இத்தகைய பயனை அளிக்கும் பொருளில்லாவிடின் இவ்வுலக வாழ்வில்லை. அறத்தைச் செய்ய பொருள் வேண்டும்; அருள் வேண்டும்; அன்பு வேண்டும். இதனை வள்ளுவர் அன்பைத் தாயாகவும், அருளைக்

குழந்தையாகவும், பொருளைச் செவிலித் தாயாகவும் கூறி யுள்ளார்.

> " அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
> செல்வச் செவிலியான் உண்டு "

என்பது வாயுறை வாழ்த்து.

இரவலனொருவன் 'ஐயா கண்ணில்லாத எனக்குக் கொஞ்சம் சோறு போடுங்கள்' என்கிறான். நம் கையில் காசில்லாததால் 'ஐயோ ! பாவம்' என்று கூறிச் செல் கிறோம். நம்மிடம் தோன்றிய அருட்குழந்தை பொருட் செவிலியால் வளர்க்கப் படாமையால் இறந்தது. இதன் கருத்து இவ்வருளால் பயனில்லை என்பதேயாகும். அறத் திற்குக் காரணமாகிய ஆக்கத்தினை அடையும் வழி ஊக்கமேயாம். ஊக்கத்தினால் முயற்சியும், முயற்சியாற் பொருளும், பொருளால் வன்மையும் பெறலாம். இதனையே பொய்யில் புலவர்,

> " உள்ள மிலாதவர் எய்தார் உலகத்து
> வள்ளிய மென்னுஞ் செருக்கு "

என்னும் குறட் பாவால் சிறப்பித்துள்ளார். இக்குறட் பாவில் பொருட்பாலின் சத்து முழுமையும் அடங்கி யுள்ளது என்று கூறலாம். செருக்கு இழிந்த பண்பாயி னும் இவ்விடத்துத் தோன்றும் செருக்கு அத்தகைய தன்று. மறதி மனிதனுக்குப் பகையாயினும், அது மனிதனுக்கு இன்றியமையாததோடு சிறந்த நன்மையை யும் பெருமையையும் அளிக்கும் இடமும் உண்டு.

> " நன்றல்லது அன்றே மறப்பது நன்று "
> " நன்னயஞ் செய்து விடல் "

என்ற குறளடிகள் இதனை வலியுறுத்தும். அதுபோலவே ஈத்துவக்கும் இன்பத்தால் தோன்றும் உள்ளக் களிப்பின் மிகுதியே செருக்காகும். இத்தகைய செருக்கு உள்ளத்தே தோன்றுவதாகும். இச்செருக்கினைத்தான் பெறவேண் டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

வள்ளியமென்னும் செருக்கையடைந்தவர்கள் உலகில் மிகச் சிலரேயாவர். லார்டு நப்பீல்டு, (Lord Nuffield) பச்சையப்பர், அண்ணாமலையரசர், அழகப்பா, ஆல்பிரட்

நோபல், தாகூர் போன்றவர்கள் தம் முயற்சியால் பொருளீட்டி, அதனைப் பொதுத் தொண்டிற்காக ஈந்து, கல்வி நிலையங்களையும், பரிசுகளையும் ஏற்படுத்தினர். அதன் வளர்ச்சியையும், அதில் பயின்று பட்டம் பெறுவோர் தொகையையும், பரிசுக்காகச் சிறந்த ஆராய்ச்சியைச் செய்து உலகிற்குப் பற்பல நன்மை புரிவோர் தொகையையும் கண்டு களித்தனர். அவர்கள் உள்ளத்தே தோன்றிய களிப்பின் மிகுதியே செருக்காக மாறியது. அத்தகைய வள்ளிய மென்னும் செருக்கைப் பெற்று, வள்ளுவன் வகுத்த நெறியில் செல்வதே நம் கடமையாகும்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியர்
திண்ணிய ராகப் பெறின்"

சொற்பொருள்

ஒற்றர் - மறைந்திருந்து செய்தியை அறிந்து வந்து கூறுபவர். மிளிர்தல் - விளங்குதல். முப்பால் - திருக்குறள். நடுவணது எய்த - நடுவிலுள்ள பொருளினை அடைய. யாக்கை-தொழிலாகு பெயர் (உடல்) கணம் - நொடிப்பொழுது. காயம் - உடல். செவிலி - வளர்க்குந்தாய். உள்ளம் - ஊக்கம். வள்ளியம் - வள்ளன்மை உடையோம். விடல் - இரண்டையும் மறந்து விடுக. திண்ணியர் - மன உறுதி உடையவர்.

வினாக்கள்

1. திருக்குறளின் சிறப்பை எழுது.
2. வள்ளுவரின் அரசியல் திறனை எவ்வாறு அறிகிறோம்?
3. பொருளின் சிறப்பையும் பயனையும் கூறு.
4. பொருளை எவ்வாறு ஈட்டல் வேண்டும்?
5. தீ நெறியால் வரும் பொருளின் நிலையை விளக்கு.
6. நிலையாமை எண்ணத்தால் வருங் கேடென்ன?
7. உடல் பற்றித் திருமூலர் கூறியதென்ன?
8. அன்பு—அருள் இவற்றின் நிலையை வள்ளுவர் எங்ஙனம் சிறப்பித்துள்ளார்?
9. மறதியால் நன்மையு முண்டென்பது எங்ஙனம் பொருந்தும்?
10. வள்ளியமென்னும் செருக்கை அடைந்தோர் யார்? யார்?

பயிற்சி

1. பொருட் சிறப்புப் பற்றி ஒரு கட்டுரை எழுது.
2. வள்ளியமென்னும் செருக்கை யடைந்தோர் வரலாறு ஒன்றை எழுது.
3. நிலையாமை எண்ணத்தால் நம் நாடடைந்த நிலைபற்றி 15 வரி எழுது.
4. லார்டு நப்பீல்டு, நோபல், பச்சையப்பர் சிறு குறிப்பு வரைக.
5. இக்கட்டுரையால் நீ அறிந்ததைத் தொகுத்து எழுதுக.

7. யாழ் நூலாசிரியர் விபுலாநந்த அடிகளார்

[வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனர்]

'இசையொடு சிவணிய யாழின் நூல்' எனக் கொங்குவேளும் 'நரம்பின் மறை' எனத் தொல்காப்பியனரும் குறிப்பிட்ட இசை நூலாகிய யாழ் நூல் இருந்த இடம் தெரியவில்லை. தமிழ் மொழிக்கே சிறப்பாக உரிய இயல் இசை நாடகம் என்னும் முத்திறங்களுள் இசை நாடகப் பகுதிகளை இடைக்காலத் தமிழர் கருத்தின்றி நெகிழ விட்டமையினலே அவை பற்றிய தமிழ் நூல்களும் மறைந்தொழிந்தன. அதனல் இக்காலத்தில் ஒருசிலர் தமிழர்க்கு இசையில்லையெனத் தம்முட் கூறித் திரிவாராயினர். இந்நிலையிலே பண்டைத் தமிழ் நூல்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத் தொகை என்பவற்றிலும், சேர முனிவர் அருளிய முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்திலும் வந்துள்ள இசை நூற் பொருள்களையெல்லாம் ஒருசேரத் தொகுத்து ஆராய்ந்து இக்காலத்துக்குப் பயன்படும் வண்ணம் 'யாழ் நூல்' என்னும் பெயருடைய இசைத் தமிழ் முதல் நூலை வகுத்தருளிய பேராசிரியர், அருள்மிகு விபுலாநந்த அடிகளாராவர்.

ஈழ நாட்டின் கிழக்குப் பகுதியான மட்டக்களப்பினைச் சார்ந்த காரேறு மூதூரில் வேளாண் செல்வராகிய சாமித் தம்பியாருக்கும், அவர் தம் வாழ்க்கைத் துணைவியார் கண்ணம்மையார்க்கும் பெறலருந் தவப்புதல்வராக 1892 மார்ச்சு 29 (கர, பங்குனி, கசூ)ஆம் நாளில், சுவாமி விபுலாநந்தரவர்கள் தோன்றினர்கள். சுவாமிக்குத் தந்தையர் இட்டு வழங்கிய இளம் பருவப் பெயர் மயில்வாகனன் என்பதாகும். மயில்வாகனனர் தம் தந்தையாரிடத்திலும் தாய் மாமன்மாராகிய சிவகுருநாதப் பிள்ளை, வசந்தராசப் பிள்ளை என்பவர்களிடத்திலும், தமிழ் நூல்களை முறையாகப் பாடங் கேட்டு வந்தார். சிதம்பர தரிசனத்திற்குச் சென்று திரும்பிய சாமித் தம்பியாரவர்கள் தாம் வாங்கி வந்த நாவலர் சரித்திரம், நாவலர் இயற்றிய சைவ நூல்

கள் என்பவற்றைத் தம் மகனுருக்குக் கொடுத்தார். அந் நூல்களைப் படித்த மயில்வாகனனுர் ஆறுமுகநாவலரைத் தம் வாழ்க்கைக்கு வழிகாட்டும் முதல்வராக எண்ணினுர்.

ஆசிரியப் பயிற்சியில் தேர்ந்த மயில்வாகனனுர் 1913-14-இல் மட்டக் களப்பு அர்ச் மைக்கேல் கலாசாலையில் ஆசிரியப் பணி மேற்கொண்டு மாணுக்கர்களுக்குக் கல்வி கற்பித்தார். 1914-ஆம்ஆண்டில் தாயார் கண்ணம்மையார் சிவபதமடைந்தார். பின் 1915-இல் அரசினர் பொறியியற் கல்லூரியிற் சேர்ந்து பேராசிரியர்கள் A. F. ஜோசப் M. W. N. ரே என்னும் இருவரிடத்திலும் விஞ்ஞானக் கலை பயின்று 1916-இல் நடந்த தேர்வில் தேர்ந்து தகுதிச் சான்றும் பெற்றுர். இவ்வாண்டிலேயே மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர்வுக்குச் சென்று தேர்ந்து தமிழ்த் துறையிலும் தகவுடைய பட்டம் பெற்றுப் பண்டித மயில் வாகனனுர் என அழைக்கப் பெற்றுர். இலங்கையிலிருந்து முதன் முதல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர் வுக்கு எழுதித் தேர்ந்தவர் மயில்வாகனனுரே ஆவர்.

நில்லாத உலகியல்பு கண்ட பண்டித மயில்வாகனனு ரவர்கள் நிலையா வாழ்க்கை அல்லேனென்று அறத் துறந்து சமயங்களானவற்றின் நல்லாறு தெரிந்துணர நாடி 1922-இல் சென்னையிலுள்ள இராமகிருட்டின சங்கத் தைச் சேர்ந்தார்கள். அக்காலத்து அவர்களுக்குத் திரு மடத்தினர் வழங்கிய பிரமசரியப் பெயர் '**பிரபோத சைதன்யர்**' என்பதாகும். பிரபோத சைதன்யர் சென்னையிலிருக்கும் பொழுது தமிழிதழாகிய ஸ்ரீராம கிருட்டின விஜயத்திற்கும், ஆங்கில இதழாகிய வேதாந்த கேசரிக்கும் ஆசிரியராய் அமர்ந்து சமயத் தொண்டாற் றினுர். இக்காலத்தில், சென்னையிலிருந்து தமிழும் சமயமும் பொருளாக ஆற்றிய விரிவுரைகளும், எழுதிய கட்டுரைகளும் பலவாகும். மதுரையிலிருந்து வெளிவரும் '**செந்தமிழ்**' என்னும் திங்களிதழில் அறிவியற் பொருள் பற்றிய கட்டுரைகளைத் திருந்திய தமிழில் வெளியிட்டுள் ளார். இவர்களது புலமை மாண்பினை யுணர்ந்த இலங்கை சர். பி. அருணுசலம் அவர்கள் அக்காலத்தில் நிறுவப்

பட்ட கொழும்புப் பல்கலைக் கழகத்திற்குப் பேராசிரியராக வரும்படி அழைத்தார்கள். இந்நிலையில் பண்டித மயில் வாகனனூர் 1924இல் சித்திரைத் திங்கள் நிறைமதி நாளில் சுவாமி சர்வானந்தரது உதவியால் சுவாமி சிவானந்த ரவர்கள்பால் தீக்கை பெற்றுத் துறவு நிலை யெய்திச் சுவாமி விபுலாநந்தர் என அழைக்கப் பெற்றூர். திருப்பா திரிப் புலியூரில் ஞானியார் மடாலயத்தில் எழுந்தருளி யிருந்த அருண்மிகு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச் சாரிய சுவாமிகள் நம் விபுலானந்த அடிகளாரை அழைத்து ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கச் செய் தார்கள்.

1925 முதல் 1931 வரை இலங்கையிலிருந்து இராம கிருட்டின மடத்தின் ஆதரவில் மட்டக்களப்பு முதலிய இடங்களில் கல்வி நிலையங்களைத் தோற்றுவித்து அவற் றைப் புரந்து வந்ததுடன், திருக்கோணமலையிலுள்ள இந் துக் கல்லூரியின் தலைமை ஆசிரியராகவும் பணிபுரிந்துள் ளார். செட்டி நாட்டரசர் திரு. அண்ணமலைச் செட்டியார் அவர்கள் தாம் நிறுவிப் போற்றிவரும் அண்ணமலைப் பல் கலைக் கழகத்தின் தமிழ்ப் பகுதித் தலைவர் பதவியை ஏற்று நடத்த வேண்டுமென அருண்மிகு விபுலாந்த அடிக ளாரை வேண்டிக் கொண்டார்கள். அவர்கள் வேண்டு கோளினை உவந்து ஏற்றுக் கொண்ட சுவாமிகள் 1931 முதல் 1933 வரை அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்து தமிழ் மொழிக்குப் பெருந் தொண்டாற்றினூர். இவ்வாறு தமிழ் நாட்டில் பல் கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக முதன் முதல் விளங் கியவர் நம் சுவாமிகளேயாவர். அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகிய சுவாமிகள் கீழ்த் திசைக் கல்வி மேற்பார்வையாளராக விளங்கினமையால் இசைக் கல்லூரியின் மேற்பார்க்கும் பொறுப்பும் அவர் களைச் சேர்வதாயிற்று. அப்பொழுது இசைக் கல்லூரி ஆசிரியராய் விளங்கிய சங்கீத கலாநிதி பொன்னையாப் பிள்ளையவர்களிடம் கருநாடக சங்கீதத்தின் அமைப்பினை நன்கறிந்து கொண்டார்கள். அதன் பின் தென்னூட்டு

இசைக் கெல்லாம் அடிப்படையாகிய பழந்தமிழிசை யமைப்பினை ஆராயத் தொடங்கினுர்கள். அடிகளார் 1933 சனவரியில் நிகழ்ந்த கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கிய பொழுது தம் ஆராய்ச்சியிற் கண்ட பழந்தமிழிசை நுட்பங்களைக் குறித்து அழகியதோர் விரிவுரையாற்றினுர்கள்.

அவர்களது அருமை மாணுக்கருள் ஒருவனுகி, பல்கலைக் கழகத்தில் தமிழ் பயிலும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சுவாமிகளிடத்துப் பயின்ற மாணுக்கர் அனைவரும் தாய்மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும், சமூக சீர்திருத்த உணர்ச்சியும் பெற்ருர்கள். சுவாமிகள் இங்கிருந்த காலத்துச் சுவாமி கேதாரீசுவராநந்தர் அவர்களும் உடனிருந்து திருவேட்களத்தை யடுத்த சேரிகளில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேண்டும் உதவிகளைச் செய்வதில் ஊக்கமூட்டி வந்தார்கள். சுவாமிகளின் விருப்பப்படி திருவேட்களச் சேரியில் இராப் பள்ளிக் கூடம் நிறுவிப் பல்கலைக் கழக மாணவர்கள் அங்குள்ள மக்களுக்குக் கற்பித்து வந்தார்கள். அவர்கள் இங்கிருக்குங்கால் தமிழகத்திற்கும், தமிழ் மொழிக்கும் நன்மதிப்பு வளரத்தக்க வகையில் உரிமையுணர்வோடும் உள்ளத் துறுதியோடும் நடுவு நிலையிற் பிறழாது தமிழ்ப் பேராசிரியப் பணி புரிந்தமை கண்டு, அறிஞர் பலரும் வியந்து போற்றினுர்கள்.

இந்நிலையில் இராமகிருட்டின மடத்தார் இலங்கையிலுள்ள பள்ளிக்கூடங்களை நடத்தும் பொறுப்பினைச் சுவாமிகளிடம் ஒப்படைத்தார்கள். சுவாமிகளும் பல்கலைக்கழகப் பணியை விடுத்து இலங்கைக்குச் சென்று சிவாநந்த வித்யாலயத்தை உருவாக்கினுர்கள்.

1936 மாசித் திங்களிலே பழந்தமிழரின் இசை, சிற்பம், கலையறிவு என்னும் பொருள்கள் பற்றிச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவிலே ஆறு விரிவுரைகள் செய்தார்கள். அவ்விரிவுரைகள் பல்கலைக் கழக மண்டபத்தில் ஆங்கில மொழியில் நிகழ்ந்தன. பிற மொழியாளர்களும் விரும்பி வந்து கேட்டார்கள். ஆங்கில இத

ழாகிய இந்துச் செய்தித்தாளில் அவ்விரிவுரைகள் வெளி வந்தன. அவற்றைப் படித்து அறிஞர் பலர் அப்பொருளை ஆங்கிலத்தில் விரிவானதோர் நூலுருவாக்கித் தரும்படி அடிகளாரை வேண்டிக் கொண்டார்கள். இச்சொற் பொழிவுகளை நிகழ்த்துங் காலத்திலேதான் அடிகளார் ஆயிரம் ஆண்டுகளாக மறைந்து போன யாழின் இயல் பினைச் சங்க இலக்கிய நூற் சான்று கொண்டு விளக்கிச் சகோடயாழினை ஓவிய உருவில் முதன் முதல் வெளிப் படுத்தினார்கள்.

1937-ல் அடிகளாரவர்கள் கயிலாயநாதனைக் காணும் வேட்கையினால் வடநாடு சென்று திருக்கயிலாயத் திரு மலையையடைந்து மானசவாவியில் நீராடித் தூய்மை நிரம்பிய உள்ளத்தோடு வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும் தெள்ளு பேரொளிப் பவள வெற் பாகத் திகழும் சிவபெருமானது திருக்கோலத்தை உயிரா வணமிருந்து உற்று நோக்கி உள்ளக்கிழியின் உருவெழு தித் தியானித்து மகிழ்ந்து தமிழகத்திற்கு வந்தார்கள். யாழ் நூலைப் பற்றி அடிகள் கூற நான் எழுதினேன்.

இக்காலத்தில் இலங்கைப் பல்கலைக் கழகம் நிறுவப் பெற்றது. அதற்கு அடிகளாரைத் தமிழ்ப் பேராசிரியராக அனுப்பி உதவும்படி இராமகிருட்டின சங்கத்தாரை இலங் கைத் தலைவர்கள் வேண்டிக் கொண்டார்கள். 1943-இல் சங்கத்தார் உடன்பாடு பெற்று அடிகளார் இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியரானார். யாழ்நூல் அச்சிடுதற்குரிய தொகையை கரந்தைத் தமிழ் சங்கத் திற்கு அளித்தும், ஆராய்ச்சியினாற் கண்ட இசைக்கருவி கள் சிலவற்றைச் செய்வித்தும் யாழ்நூல் அரங்கேற்றத் திற்கான எல்லா வசதிகளையும் தாமே செய்தும் பல்லாற் றானும் உதவியவர்கள் கோனூர் ஜமீன்தாரும், திருக் கொள்ளம் புதூர்த் திருப்பணிச் செல்வரும், கரந்தைத் தமிழ்ச் சங்கப் பேரன்பருமாகிய திருவாளர் பெ. ராம. ராம சிதம்பரஞ் செட்டியாரவர்களாவர். இவர்களுக் குரியதாய்ப் புதுக்கோட்டையிலுள்ள இராம நிலையமே விபுலானந்த அடிகளாரின் தாய் வீடாக விளங்கியது.

யாழ்நூல் எழில் மிக்க வடிவில் திருத்தமுற வெளிவருவ தற்கு ஆகவேண்டிய தொண்டுகளை யெல்லாம் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பேரன்பரும், பொழிற்றெண்டருமாகிய திருவாளர் அ. கணபதிப் பிள்ளையவர்கள் மேற்கொண்டு மனஞ் சலியாது செய்து நிறைவேற்றினார்கள். இந்நூலி னது அரங்கேற்று விழா சருவசித்து ஆண்டு வைகாசித் திங்கள் 22-ம் நாள் (5-6-1947) தமிழ் விரகராகிய திருஞான சம்பந்தப் பிள்ளையார் இறைவனடி சேர்ந்து இன்புற்ற மூலநாளிலே திருகொள்ளம் புதூர்த் திருக் கோயிலிலே நல்லிசை ஞானசம்பந்தர் திருமுன்னிலையிலே சிறப்பாக நடைபெற்றது.

அடிகளார் இயற்றிய இசைத் தமிழ் நூலாகிய யாழ் நூலில் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் கண் டுணர்த்திய இசை நுட்பங்களும் அடிகள் காலத்து யாழ்க் கருவியின் அமைப்பும் அவர்களுக்கு நெடுங்காலத்திற்கு முன்னரே பழந் தமிழ்ப் பாணர்கள் கண்டு பாடிய இசைத் திறங்களின் இயல்பும் உலக இசைகள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாயமைந்த பழந் தமிழிசையின் மேன்மையும் இசை நூல் வரன் முறையும் இனிது விளக்கப் பெற் றுள்ளன. யாழ்நூலரங் கேற்று விழா தமிழ் நாட்டின் எதிர்காலத் தமிழ் வளர்ச்சியை இனிது புலப்படுத்தியது. யாழ் நூற்பொருளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளி யிட வேண்டுமெனத் தமிழ்ப் பெருமக்கள் அடிகளாரை வேண்டிக் கொண்டார்கள். அடிகளும் அவ்வேண்டு கோளை உளமுவந்து ஏற்றுக் கொண்டார்கள்.

யாழ் நூலாசிரியர் அரங்கேற்று விழா முடிந்த பின் னும் திருக்கொள்ளம்பூதூரில் இரண்டு வாரம் தங்கி யிருந்து மருந்துண்டு ஓரளவு உடல் நலம் பெற்றபின் அங்கிருந்து புறப்பட்டு 30-6-47-இல் கொழும்பு நகரத்தை யடைந்தார்கள். பாரிசவாயுவின் தொந்தரவாலும் நெடுந் தூரப் பயணத்தாலும் களைப்புற்ற அடிகளாரது உடல் நலங் குன்றியது. கவலைக் கிடமான நிலையில் இராம கிருட்டின மடத்தினரும் சுவாமிகளின் நண்பர்களும் மிகவும் கருத்தாக உடனிருந்து வேண்டும் மருத்துவங்

களைச் செய்தார்கள். எனினும் நோய் கடுமையுற்றது. 19–7–47 சனிக்கிழமை இரவு $1\frac{1}{2}$ மணிக்கு அருண் மிகு விபுலாநந்த அடிகளார் தமது ஐம்பத்தைந்தாவது வயதில் தமிழறிஞர் உளங்கலங்க, இவ்வுலக வாழ்வை நீத்துக் கயிலாய பெருமான் திருவடிகளில் இரண்டறக் கலந்து இன்புற்றுர்கள். அடிகளார் மறைந்த செய்தி ஈழ நாட்ட வரையும், தமிழ் நாட்டவரையும் துயரக் கடலில் ஆழ்த் தியது. என் செய்வது? காலவரம்பினைக் கடத்தல் எவ்வாறு முடியும்? யாழ் நூலாசிரியரது பெரும் பிரிவு தமிழர்க்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாய் முடிந்தது. அடிகளாரது புகழுடம்பு தமிழறிஞர் உள்ளங்கள்தோறும் என்றும் அழியாது நிலைபெற்றுத் திகழுமென்பது திண்ணம்.

சொற்பொருள்

சிவணிய - பொருந்திய. நரம்பின்மறை - யாழ்நூல். கொங்குவேள் - பெருங்கதை நூலாசிரியர். முத்திறம் - மூவகைப் பாகுபாடு, சேர முனிவர் - இளங்கோ அடிகள். பட்டிமண்டபம் - சொற்போற் மண் டபம். வெள்ளி வெற்பு - கயிலைமலை. உயிராவணம் - மூச்சுவிடாத நிலையில். இறைஞ்சி - வணங்கி. தமிழ்ப்புவி - தமிழ் உலகம். எழில் - அழகு.

வினுக்கள்

1. இசைநூலைக் கொங்குவேளும் தொல்காப்பியனும் எவ்வாறு போற்றினர்?
2. யாழ்நூல் தோன்றக் காரணம் யாது?
3. விபுலாநந்தர் எங்கு எப்போது தோன்றினுர்?
4. அடிகளாரின் கல்விப் பயிற்சியை எழுதுக.
5. அடிகள் எங்கெங்கு பேராசிரியாய்த் தொண்டாற்றினுர்?
6. விபுலாநந்தரின் கயிலைமலைச் செலவைப் பற்றி எழுதுக.
7. அடிகளாரிடத்தில் பயின்ற மாணவர்கள் எத்தகைய அறிவைப் பெற்றனர்?
8. திருவேட்களத்தில் அடிகள் செய்த தொண்டுகள் யாவை?
9. யாழ்நூல் வெளிவர உதவியவர் யாவர்?
10. அடிகள் எங்கு எப்போது காலமடைந்தனர்?

பயிற்சி

1. "விபுலாநந்தரின் தொண்"டினைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.
2. தமிழிசைக்குத் தொண்டு செய்த பெரியார்களைக் குறிப்பிடுக.
3. வாக்கியங்களில் அமைக்க: இசைத்தமிழ், யாழ்நூல், கயிலைச் செலவு, மரகதக் கொடி, பவள வெற்பு, நிறைமதி நாள்.
4. சிறு குறிப்புத் தருக: மயில் வாகனர், செந்தமிழ், மானச வாவி, பொன்னையாப்பிள்ளை, சிதம்பரஞ் செட்டியார்.

TAMIL ILAKKIYA KOVAI

FOR FORM V—SPECIAL STUDY

BY
T. MURUGESAN
AND
R. GANAPATHY

THENNATTU PATHIPPAKAM
16, BROADWAY : : MADRAS-1

PRICE Rs. 0-75